
# செங்கதிர்

இலட்சியம் இல்லாமல் இலக்கியம் இல்லை

## சர்வதேச மகளிர் தினச் சிறப்பிதழ்



50/=




கொழும்பு தமிழ்ச் சங்கம்

"இலட்சியம் இல்லாமல்
இலக்கியம் இல்லை"

# செங்கதிர்

**3**

பங்குனி 2008 (தி.வ ஆண்டு 2039)

ஆசிரியர் : செங்கதிரோன்

**தொடர்பு முகவரி**

இல.19, மேல்மாடித்தெரு
மட்டக்களப்பு.

**தொலைபேசி**

065 2223950
077 3597045

**மின்னஞ்சல்**

senkathirgopal@gmail.com

**ஆக்கங்களுக்கு
ஆக்கியோரே பொறுப்பு.**

## ஆசிரியர் பக்கம்

'செங்கதிரின் இம்மாத இதழ் (வீச்சு-3) சர்வதேச மகளிர் தினச் சிறப்பிதழாக விரிகிறது.

தமிழர் பண்பாட்டில் எப்போதும் பெண்களுக்கு உயர்ந்த இடமே உண்டு. ஆணுக்குப் பெண் சமம் என்பதை தமிழர் பண்பாடு எப்போதும் வலியுறுத்தி வந்துள்ளது. திராவிடர் நாகரிகத்தில் ஆரியக் கலப்பு ஏற்பட்ட பின்னரே ஆணாதிக்கக் கருத்துக்களும் பெண்ணடிமை மனப்பாங்கும் தலைதூக்கின என்பதே வரலாற்று உண்மை. இத்தாக்கங்களிலிருந்து நாம் படிப்படியாக விடுபட்டு வருகிறோம் என்பதும் விடுபட வேண்டும் என்பதும் அவசியமானதும் அறிவுபூர்வமானதுமாகும். இதனை வலியுறுத்துவதும் 'செங்கதிர்' இன் பணிகளுள் ஒன்று.

போரும், 'சுனாமி' யும் நம் மண்ணில் பல இளம் விதவைகளை உருவாக்கியுள்ளன. அவர்களைச் சமூக, பொருளாதார ரீதியாக கைதூக்கிவிட வேண்டியது நம் முன்னால் உள்ள மிக முக்கியான கடமையாகும். பல பெண்ணிய அமைப்புக்களும், ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களும் இவற்றில் ஈடுபட்டாலும்கூட அவை போதுமானவையாக இல்லை. வெளிநாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து பெருமளவு நிதியுதவியி

னைப் பெற்று செயற்பட்டு வருகின்ற அரச சார்பற்ற நிறுவனங்களிடம் குறிப்பாக பெண்ணிய அமைப்புக்களிடம் ஒரு விநயமான வேண்டு கோள்,

பெண் விடுதலை விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் - மாநாடுகள் - பட்டறைகள் - வெளியீடுகள் என்று அவற்றில் மட்டுமே சிரத்தை கொள்ளாது சமாந்தரமாக சமூகத்தில், போரினால் - இயற்கை அனர்த்தங்களினால் - வன்முறைகளால் பாதிப்புக்குள்ளாயிருக்கும் பெண்களுக்கு மறுவாழ்வு அளிக்கின்ற நடைமுறைச் செயற்பாடுகளையும் அதிகளவில் மேற்கொள்ளுங்கள். 'செங்கதிர்' அதற்குப் பக்கபலமாய் நின்று உழைக்கும்.

- செங்கதிரோன் -

**"செங்கதிர்" கட்டண விபரம் : (அஞ்சல் செலவு உட்பட)**

| | இலங்கை | இந்தியா | வெளிநாடு |
|---|---|---|---|
| அரையாண்டுக்கட்டணம் | 500/- | 250/- | US $ 10 |
| ஓராண்டுக் கட்டணம் | 1000/- | 500/- | US $ 20 |
| ஆயுள் கட்டணம் | 10,000/- | 5000/- | US $ 100 |
| புரவலர் கட்டணம் | 25,000/- | 12,500/- | US $ 250 |

ஆயுள் கட்டணம் செலுத்துவோருக்கு வாழ்நாள் முழுவதும் "செங்கதிர்" வழங்கப்படும். புரவலர்களுக்கு வாழ்நாள் முழுவதும் "செங்கதிர்" வழங்கப் படுவதுடன் "செங்கதிர்" எதிர்காலத்தில் வெளியிடவுள்ள எல்லா நூல்களும் இலவசமாக வழங்கப்படும்.

**விளம்பரக் கட்டணம்**

| | | | | |
|---|---|---|---|---|
| பின் அட்டை வெளிப்புறம் | முழு | 5000 | 1500 | US $ 50 |
| | அரை | 3000 | 1000 | US $ 30 |
| முன் அட்டை உட்புறம் | முழு | 3000 | 1000 | US $ 30 |
| | அரை | 2000 | 750 | US $ 20 |
| பின் அட்டை உட்புறம் | முழு | 2000 | 750 | US $ 20 |
| | அரை | 1500 | 500 | US $ 15 |

**அன்பளிப்பு**

அன்பளிப்புச் செய்ய விரும்பும் நலன்விரும்பிகள் (உதவும் கரங்கள்) தாங்கள் விரும்பும் தொகையை ஆசிரியரிடம் வழங்கலாம்.

வங்கி : மக்கள் வங்கி (நகரக்கிளை), மட்டக்களப்பு.
கணக்கு இல : 113100138588996 (நடைமுறைக்கணக்கு)
காசுக்கட்டளை : அஞ்சல் அலுவலகம், மட்டக்களப்பு.



# அதிதிப்பக்கம்

## மாலா சபாரத்தினம்



'செங்கதிர்' இன் இம்மாத அதிதி 'சிலிங்கோ' (Ceylinco Consolidated - CCAS Group) நிறுவனத்தின் பிரதித் தலைவரான சட்டத்தரணியும் சமாதான நீதவானுமாகிய மாலா சபாரத்தினம் அவர் களாவர்.

இதற்கு மேலதிகமாக 'சிலிங்கோ குறூப்' (Cylinco Group), 'செலான் வங்கி' (Seylan Bank PLC), 'த பினான்ஸ்' நிறுவனம் (The Finance Company PLC) ஆகியவற்றின் சட்டத்துறைப் பணிப்பாளராகவும் இலங்கை வங்கியின் சட்ட ஆலோசகராகவும் பணிபுரியும் இவர் தனது தொழில்சார் பணி களுக்கு அப்பால் பல சமூக சேவை நிறுவனங்களிலும், புலமைசார் நிறுவனங்களிலும் தீவிர செயற்பாட்டாளராகவும் திகழ்கிறார். இவரது ஆளுமையின் சிறப்பு இது.

இலங்கை பெண்கள் சட்டத்தரணிகள் சங்கத்தின் (Sri Lanka Women Lawyers Association) மற்றும் 'Association of Corporate Lawyers Sri Lanka' அமைப்பின் முன்னாள் தலைவர்.

மேலும் 'Women in Need' எனும் பெண்களுக்கு எதிரான வன்முறை களுக்கு எதிரான அமைப்பின் தலைவராகவும்; 'For India, Bangladesh and Sri Lanka of Zonta International' எனும் தொழில் மற்றும் வணிகத்துறைப் பெண்களுக்கான சர்வதேச அமைப்பின் ஆளுநராகவும்; 'Family Rehabilitation Centre' எனும் பெண்களுக்கு எதிரான திட்டமிட்ட வன்முறைகளுக்கு எதிரான அமைப்பின் நிறைவேற்றுக் குழு உறுப்பினராகவும்; கொழும்புப் பல்கலைக்கழக 'கவுன்சில்' உறுப்பினராகவும்; கொழும்பு வை.எம்.சி.ஏ. இன் ஆலோசனைக்குழு உறுப்பினராகவும்; கொழும்பு சைவ மங்கையர் கழகத்தின் துணைத் தலைவரா கவும்; இலங்கை சத்தியசாய் மத்திய அறக்கட்டளையின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் இப்படி பல்துறைப் பணிகள் ஆற்றும் ஆளுமை நிரம்பிய இவரை 'செங்கதிர்' இதழின் இம்மாத அதிதியாக அறியத் தருவதில் 'செங்கதிர்' பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறது.

- ஆசிரியர் -

# மாற்றங்கள் - அவை எம்மிடமே தொடங்கட்டும்

*மாலா சபாரத்தினம்*

மற்றுமொரு சர்வதேச மகளிர் தினம் வந்து போயிற்று. ஆரவாரங்கள், பதாதைகள், கொண்டாட்டங்கள் என்று நாடெங்கும் ஆர்ப்பாட்டங்கள் நடந்து முடிந்தன. இவற்றால் எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்பட்டனவா என்ற கேள்விக்குப் பெரும்பாலான பெண்கள் மறு கேள்வியாக - இவற்றால் எமது வாழ்வில் எவைதான் மாறியுள்ளன என்று குரல் எழுப்பினர்.

'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்று அன்றே கூறப்பட்டது. மாற்றங்களை ஏற்படுத்த நாம் யாரை எதிர்பார்க்கிறோம்? அவை ஏன் நம்முள் இருந்து ஏற்படக்கூடாது? சிந்திக்க வேண்டிய விடயங்கள்.

உலகளவில் பெண் விண்ணைத் தொட்டுவிட்டாள், இந்திய வம்சாவளி சுனிதா வில்லியம்ஸ் என்ற பெயரில். ஜனாதிபதிகள் பிரதீபா படேல், சந்திரிகா குமாரணதுங்க, முதல் பெண் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க, மந்திரிகள், நிர்வாகிகள், தொழில்துறை நிறுவனர்கள், வீராங்கனைகள் என்று சாதனை படைத்த பெண்கள் பட்டியல் நீண்டுகொண்டே போகிறது. ஆனால் அவை குறிப்பிட்ட தனிப்பட்ட பெண்களின் வெற்றி முத்திரைகளாகத்தான் மிளிர்கின்றன.

இலங்கையின் தேசிய வருமானம் - தோட்டத்துறை, ஆடை தயாரிப்பு வெளிநாட்டு தொழில்புரிவோர் வருமானம் என்று பெண்பாலரின் பங்களிப்பால் நிறைந்து காணப்படுகிறது. ஆனால் - பெண் சமுதாயமோ சம்பள வித்தியாசம், போஷாக்குக் குறைவு, கல்வி, சுகாதார வசதிகள், பாதுகாப்பு என்று இன்னுமே பலவற்றை எதிர்நோக்கி நிற்கின்றது. ஆனால்.... ஆனால்.... ஆனால்.... இன்று அடிப்படை வசதிகள் தொக்கி நிற்கின்றன. அரசியலில் பிரகாசிக்கும் பெண்களால் பெண்கள் சமூகத்திற்கு இவற்றைப் பெற்றுத்தர முடியாத நிலை. நிர்வாக சேவையும் பெண்களுக்கென்று பிரத்தியேக செயலகங்களும் பெண்களின் அத்தியாவசிய சேவைகளை அவர்கட்கு அளிக்கும் செயற்திறன் இன்றிக் காணப்படுகின்றன.



இதனால்தான் ஊனமுற்றோர் தினம், வலுவிழந்தோர் தினம், தொற்று நோய் தினம், விலங்குகள் தினம் என்பதுபோல் மகளிருக்கும் ஒரு நாளை விஷேட தினமாக்கி விட்டு நிம்மதி காண்கிறது சமூகம்.

நாமே நமக்குள் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டிய உறுதியை ஏன் ஏற்படுத்திக் கொள்ளக்கூடாது?

குடும்பத் தலைவியாய், தாயாய் இருக்கும் பெண் தன் குடும்பத்திலிருந்தே நிறைவேற்று அதிகாரத்தின் மூலம் சமத்துவத்தை ஏற்படுத்தலாகாதா?

ஒரு பெண் உயிர்பெறும் முன்பே அழிந்துபோகும் வாய்ப்பிலிருந்து - பெண் சிசுக் கொலையை நிறுத்தும் தைரியம் அவள் கைகளிலே இல்லையா?

உணவு, போஷாக்கு என்பவற்றில் ஆண்குழந்தை, பெண் குழந்தை என்ற பேதமின்றி சமமாகக் கொடுத்து சமத்துவத்தை ஆரம்பிப்போம். பெண் குழந்தையின் போஷாக்கு எதிர்கால சந்ததியின் வலிமையையும், ஆரோக்கியத்தையும் நிர்ணயிக்கிறது. பெண் குழந்தையைப் பேணுவோம், வலிமையூட்டுவோம்.

பொருளாதார, சமூகப் பிரச்சினையின் முதற் சுமை இளம் பெண்களின் தலையில்தான் விடிகிறது. வீட்டில் கஷ்டமா? தாயாருக்கு அசௌகரியமா? மகள் பாடசாலையிலிருந்து நிற்கட்டும். இது ஒரு மாற்றக்கூடிய மாற்றம் அல்லவா?

வீட்டு வேலைகளில் உதவி பங்களிப்பா? அது அவ்வீட்டுச் சிறுமி தலையில்தான். சிறுவன் விளையாடப் போகிறான். தனது கருமங்களையும் சகோதரியிடம் சுமத்தி விட்டு.

இதனால்தான் மாறிவரும் சமூகத்தின் ஏணிப்படிகளில் கிடுகிடுவென ஏறி உயரத்தை எட்டும் இளம் பெண்களும் திருமணத்தின் பின் தமது பதவிகளில் பெரும் சறுக்கத்தை ஏற்படுத்திக் கொள்கின்றனர். அலுவலகத்தின் நிறைவேற்று அதிகாரி அவள். குடும்பப் பொருளாதாரம் அவளால்தான் நிமிர்ந்து நிற்கிறது. ஆனால் அதே வீட்டில் அவள்தான் சம்பளமற்ற மதிக்கப்படாத கூலிக்காரி. அதுமட்டுமல்ல அலுவலகத்தின் அவசரத்துக்கிடையேயும் ஓடிஓடி பிள்ளைகளைப் பாடசாலையிலிருந்து கூட்டிவர வேண்டும். கடைகளுக்குப் போக வேண்டும், வீட்டில் தண்ணீர் குழாய் உடைந்தால் அது திருத்தப்படும் வரை மேற்பார்வையும் செய்ய வேண்டும். கணவன் - அவன்

இவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டவன், மேம்பட்டவன்.

இருவரும் இணைந்துதான் குடும்பத்தையும் தம்மையும் உயர்த்த வேண்டும் என்ற அடிப்படைக் கோட்பாடு தாயார் மடியில் அன்றி வேறெங்கு ஒரு ஆண் மகனுக்குப் புகட்டப்படக்கூடும்?

மாறிவரும் சமூக நிலைமைகளுக்கேற்ப உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் ஈடுகொடுக்க பெண்ணை தயார்படுத்தி, உஷார் படுத்தி, வலுவூட்டுவது என்பதும் பெண்கள் கைகளிலேயே உள்ளன.

அன்றே அம்மாமார், பாட்டிமாரின் இரகசிய சேமிப்பு முறைகள் புடவைக் கடியில் பொத்தியும், அயலாருடன் சேர்ந்து சீட்டுச் சேமிப்பு என்றும் பெரும் வங்கி வழி முறைகளைக் கையாண்டும் குடும்பம் சரியும் போது அவர்கள் அதை நிமிர்த்தினர். இன்று தனது சம்பளத்தையே கொடுத்துவிட்டு கணவன் ஊதாரிச் செலவுகளின் பின் கடனுக்குக் கையேந்தும் ஏமாளிப் பெண்களுக்கு இவை பற்றிய விழிப்புணர்வு ஏற்படும் வகை செய்ய வேண்டும்.

முன்பு நான்கு சுவர்களுக்குள் நடந்த சச்சரவுகள் இன்று குடும்ப வன்முறைகளாக மாறி, சட்டம் போதும் அளவுக்கு உக்கிரமாயின. **'சட்டம் என்பது வெளிக்காவல், தர்மம் என்பது மனக்காவல்'** என்ற கவியின் வாக்குப்போல் நேயம், அன்பு, சகிப்புத்தன்மை என்ற பண்புகள் ஆண், பெண் குழந்தைகள் மனதில் உருவாக்குவதிலும் வளரும் குழந்தைகள் முன்னிலையில் சண்டை சச்சரவுகளைத் தவிர்த்து வன்முறையற்று வாழும் கலையை வளர்ப்பதும் பெண்களின் ஆற்றலன்றோ.

பெண் மென்மையானவள். அன்பானவள். ஆதரிப்பவள். அத்தோடு இயற்கையே அவளுக்குள் ஓர் உயிரைச் சுமந்து கொணரும் ஆற்றலையும் அளித்திருக்கிறது என்பதும் அவளுக்கு நினைவூட்டப்பட வேண்டியதாகிறது.

துறவி ஒருவர் ஒரு ஊரைக் கடந்து போகும் போது அங்கு பாம்பு ஒன்று பலரைக் கடித்து துன்புறுத்துவதைக் கண்டார். அம்மக்களின் வேண்டுகோளின்படி அந்தப் பாம்பின் அருகே சென்று தன் சக்தியால் அதைச் சாந்தப் படுத்தி "பிறரைக் கடிக்காதே" என்று கூறிச் சென்றார். அடுத்த முறை அவர் அதே வழியில் வரும் போது பாம்பு இறக்கும் தருவாயில் இருப்பதையும் சிறுபிள்ளைகள் கூட அதனை அடிப்பதையும் கண்டார். பாம்பு அவரைக் கண்டதும் "உங்கள் உபதேசப்படி நான் எவரையும் கடிக்காமல் இருந்தேன். என் நிலைமையைப் பார்த்தீர்களா?" என்று விசனித்தது. சந்நியாசி பாம்பிடம் "நான் எவரையும் கடிக்க வேண்டாம் என்றுதானே கூறினேன். சீற வேண்டாம் என்றேனா?" என்று கேட்டார். இப்படித்தான் பெண்ணும் மென்மையின் உள்ளே வைரமாக, ஆற்றல் மிகும் சக்தியாக வாழ்வைச் சீராக்கும் தன்னம்பிக்கை உள்ளவளாக உருவாக்கப்பட வேண்டும்.

நிலையற்ற உலகில் மாற்றங்கள் மட்டும் தான் நிலையானவை. மாற்ற முடியாதவை. என்றும் அவற்றுக்கமைய எல்லோரும் மாறத்தான் வேண்டும் என்பதும் நியதி. அப்படியான மாற்றங்கள் உயர்ந்தவையாக உன்னதமானவையாகயிருக்க வேண்டுமானால் உலகை உந்துவிக்கும் சக்தியாக ஆக வேண்டுமென்றால் அவை எம்முள்ளிருந்தே தான் ஆரம்பிக்க வேண்டும் அல்லவா. மாற்றங்கள் நம்மிடமிருந்தே தொடங்கட்டும். ■

## தாஜ்மஹால்


*காதலி*
*புதைக்கப்பட்ட*
*இடம்*
*காட்டுகிறாய்...*

*காதலைப்*
*புதைத்த இடம்*
*காட்டு.*

*எங்கே*

*ஷாஜஹானால்*
*கசக்கி*
*எறியப்பட்ட*

*அந்தப்புரப்*
*பெண்களின்*
*கறுப்புக்*
*கல்லறைகள்?*



நன்றி : 'காசி ஆனந்தன் நறுக்குகள்'

# சர்வதேச மகளிர் தினம்

## (International Women's Day)

**தினம் : மார்ச் 08**

**கருப்பொருள் :**

பெண்களுக்கான மனித உரிமைகள் மதிக்கப்படல் வேண்டும். சமூக வளர்ச்சியில் அவர்களின் முதன்மையும் பங்களிப்பும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

**பின்னணி :**

பண்டைய கிரேக்கத்தில் போர் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் போரில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஆண்களுக்கு பாலியல் சேவையை வழங்கி வந்த லைலிஸ்ட்ராட்டா *(Lycistrata)* என்ற சாதாரண பெண், போரை முடிவுக்குக் கொண்டுவருவதை நோக்கமாகக் கொண்டு தன் சேவையை பகிஷ்கரித்தாள். இச்செயல் போரை முடிவுக்குக் கொண்டு வந்ததுடன், வரலாற்றில் பெண்ணுக்குக் கிடைத்த முதல் வெற்றியாகவும் அமைந்தது. பிரான்ஸியப் புரட்சியின் போது பாரிஸ் பெண்கள், விடுதலை, சமத்துவம், தோழமை வேண்டிப் போராடினர். இத்தகைய போராட்டங்கள் 20ம் நூற்றாண்டில் வலுவடைந்தன.

1909 இல் அமெரிக்காவில் சோஷலிசக் கட்சியின் பிரகடனத்துக்கமைய முதலாவது தேசிய மகளிர் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. 1910 இல் கொப்பனேகனில் சர்வதேச மகளிர் மகாநாடு கூட்டப்பட்டது. தொடர்ந்து வேறுபல நாடுகளிலும் மகளிர் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. 1917 இல் சார் வீழ்ச்சியின் பின் ரஷ்யாவில் பெண்கள் வாக்குரிமை பெற்றனர். 1945 இன் ஐ.நா. சாசனம் பெண்களின் அடிப்படை உரிமைகள் அங்கீகரித்த முதலாவது ஆவணமாகும். 1947 இலிருந்து பெண்கள் அந்தஸ்த்துக்கான ஐ.நா. ஆணைக்குழு செயற்படத் தொடங்கியதும் மேலும் பல உரிமைகளை பெண்கள் பெற்றனர்.

முதலாவது சர்வதேச பெண்கள் மாநாடு 1975 இல் மெக்ஸிகோவிலும் தொடர்ந்து 1980 இல் கோப்பனேகனிலும், 1985 இல் நைரோபியிலும், 1995 இல் பீஜிங்கிலும் கூட்டப்பட்டன. 1981 இல் நடைமுறைக்கு வந்த பெண்களுக்கு எதிரான சகலவித பாரபட்சங்களையும் நீக்குவது தொடர்பான சாசனம் பெண்களுக்கான உரிமைப் பட்டயம் எனப்படுகிறது. 161 நாடுகள் இதனை ஏற்றன. இதனைத் தொடர்ந்து இலங்கையிலும் சர்வதேச மகளிர் செயற்பாடுகள் அழுத்தம் பெறலாயின.

நன்றி : 'சர்வதேச நினைவு தினங்கள்'
- யூ.எல்.அலியார் - எம்.ஏ.





# கண் கேட்காது

சித்திரா சுதாகரன்

உண்மைதான்.

நேற்றுப் பின்னேரம் நான் வந்ததிலை இருந்து இந்திராவைக் கவனிச்சதிலை, அம்மாவும் அண்ணையும் சொன்னதெல்லாம் உண்மைதான்போலைக் கிடக்குது. நான் தான் அவையோடை தேவையில்லாமல் மல்லுக் கட்டியிருக்கிறன்.

இந்திரா சிலோமோசனிலைதான் நடக்கிறா. சிலோமோசனிலைதான் சிரிக்கிறா. போட்ட பஞ்சாபி மடிப்புக் குலையாமல் பொம்மை மாதிரி செற்றியில இருக்கிறா. அண்ணா போட்டுக் கொண்டு வந்த ரீயை 'தாங்ஸ்' சொல்லி வாங்கி சிலோமோசனிலைதான் குடிக்கிறா. இது பழைய இந்திரா இல்லை. அண்ணர் பாவம்.

எங்கடை ஊர்ப் பெடியளிலை பலரைப் போல அண்ணரும் இனத்துவேசத்துக்கு அப்பரைத் தூக்கிக் குடுத்திட்டு, குடும்பப் பாரத்தைத் தலையிலை தூக்கிக் கொண்டு கடல் கடந்து பரதேசம் சுற்றி பாரிஸிலை வந்து செற்றிலானவர்தான். அது நடந்து வருசம் இருபது ஆச் சுது. சந்நியாசிகளுக்காகவது அப்படி இப்படி கொஞ்சம் மனம் பிரண்டிருக்கும். ஆனால் அண்ணர் குடும்ப நலம் ஒன்றே தவமாய், இளமையெல்லாம் துறவறம் பூண்டு கடைசித் தங்கச்சியையும் கட்டி



வைச்சிட்டுத்தான் ஓய்ஞ்சார். ரெண்டு தம்பிமாரை வெளியிலை எடுத்துவிட்டு, அக்காவைக் கரை சேர்த்து, கடைசித் தங்கைச்சியான என்னையும் பாரிஸூக்குக் கூப்பிட்டுக் கட்டி வைக்க, அவருக்கு வயது நாற்பதைத் தாண்டிவிட்டது.

அம்மாவும் பல வருசமாய் "குடும்பத்தைப் பாத்தது காணும். உனக்கெண்டொரு வாழ்க்கையைத் தேடு" எண்டு கெஞ்சுமட்டும் கெஞ்சிப் பாத்திட்டா. அண்ணர் பிடி குடுக்க இல்லை. நானும் பாரிஸூக்கு வந்ததும் அண்ணரை "கட்டடா! கட்டடா!" எண்டு அரிக்கத் தொடங்கிட்டன். அண்ணருக்கு கலியாணம் எண்டது பிடிக்காத விசயம் எண்டில்லை. நாற்பது வயதுக்குப் பிறகு கட்டி என்னத்தை வாழுறது எண்ட எண்ணம்தான். ஆனால் நான் கொஞ்சங் கொஞ்சமாய் ஆளை வழிக்குக் கொண்டுவந்திட்டன். சீதனங்கீதனம் வாங்காமல், கனகாலமாய்க் கலியாணம் சரிவராமல் கஸ்டப்படுற பிள்ளையாப் பாருங்க எண்டு சம்மதம் சொன்னார். இவர் சொன்ன கொண்டிசன்களைக் கேட்டவுடனை எனக்கு இந்திராதான் ஞாபகத்துக்கு வந்தாள்.

இந்திரா பாலர் வகுப்பிலையிருந்து உயர் தரம் வரை என்ரை பள்ளித்தோழி. பட்டுப் பாவடையும் மலிபன் விஸ்கற் பக்கற்றுமாய் முதல்நாள் பள்ளிக்கு வந்த இந்திராவை எல்லாரும் ஆச்சரியமாய்ப் பார்த்தம். அசாதாரணமாய் அவள் அடிக்கடி கண்சிமிட்டிக் கொண்டிருந்தாள். சிலநேரம் அவளின் நெற்றியும் சுருங்கினது. இதைப் பாத்துக் கன பிள்ளையள் வெருள, கங்கா ரீச்சர் என்னட்டைத் தான் "நீர் அச்சாப் பிள்ளைதானே இவவை உமக்குப் பக்கத்திலை வைச்சிரும்" எண்டு இந்திராவை எனக்குப் பக்கத்திலை இருத்திட்டுப் போனா. அண்டையிலை இருந்து நாங்கள் நல்ல தோழிகளானோம்.

ஆனால் அவள் என்னைப் போல இல்லை. விழுந்து விழுந்து படிப்பாள். பாட்டுக்கிளாஸ், டான்ஸ் கிளாஸ் எண்டு சின்னனிலை தொடங்கி வளர வளர தையல் கிளாஸ், ஐசிங் கிளாஸ், மேக்கப் கிளாஸ் எண்டு முன்னேறினாள். ஏன் இப்பிடிப் பறக்கிறாள் எண்டது, அவளின்ரை வீட்டை போய்வரத் தொடங்கினாப் பிறகுதான் விளங்கிச்சுது. அவளுக்குச் சின்னனிலையிருந்து கண் இப்படித்தானாம். அடிக்கடி கிமிட்டுமாம். கண்ணுக்குக் கிட்ட ஒரு சின்ன நரம்பிலை ஒரு சின்னப் பிழையாம். அதுக்கு வைத்தியம் செய்தால் சிலவேளை பார்வையைப் பாதிக்குமாம் எண்டு டொக்டர்மார் சொல்ல அப்பிடியே விட்டாச்சாம்.

ஆனால் பாக்கிற ஆக்கள் பிள்ளைக்கு வலிப்பு வாறதோ? மயக்கம் வாறதோ? எண்டு ஆராய்ச்சி செய்யவும் ஊரிலை இந்திரா எண்ட பேர் மறைஞ்சு 'மின்மினி' எண்ட பட்டப்பேர் பரவவும் வீட்டுக்காரர் பயந்திட்டினம். கலியாணம் எண்டு வரக்கை



இந்தக் குறைதானே முன்னாலை நிக்கும். இதுக்கு ஈடாத் தான் வீட்டுக்காரர் இந்திராவைக் கலைச்சுக் கலைச்சு எல்லாத் திறமையையும் வளர்க்க வைச்சினம். சமையல், வீட்டு வேலை, குடும்ப நிர்வாகம் எண்டு எல்லாத்திலும் தேறியிருந்தாள். ஆனால் எனக்கு அவளின்ரை கலகலப்பான இயல்பும், பெரிய சிரிப்பும், சுறுசுறுப்பும், நகைச்சுவையுணர்வுமே அதிகம் பிடித்திருந்தன.

ஆனால் இதெல்லாம் அவளுக்குக் கலியாணத்தைத் தேடித் தரேல்லை. பட்டதாரி ஆசிரியையாயும் டான்ஸ் ரியூசனிலையும் கொள்ளைகொள்ளையாய் உழைச்சும், அந்தக் கண்சிமிட்டிற குறைதான் பல மாப்பிள்ளையளைக் கலைச்சுப் போட்டுது. இவளோட பல வருசமாய்ப் படிப்பிச்ச வாத்தியார் ஓராள் இவளைப் பிடிச்சிருக்கெண்டு பொம்பிளை கேட்டு வந்தார். சாதாரணமாய் பட்டதாரி வாத்திமார் கேக்கிற பல லட்சம் சீதனத்தோட இவளிடை கண்சிமிட்டலுக்காய் அஞ்சு லட்சம் கூடக் கேட்டார். இவளுக்குப் புண்ணிலை புளிப்பத்தின கோவம். கோவத்தை அடக்கிக் கொண்டு எங்கவீட்டை அவ்வளவு வசதியில்லையெண்டு வாத்தியாரைத் திருப்பியனுப்பிற்று, பள்ளிக்கூடத்திலை வைச்சுப் பழிவாங்கினாள். வாத்தியார்ற நாலைஞ்சு வகுப்பு ஆன்சர்ப் பேப்பர்களை அடிச்சுக்கொண்டு வந்து கொழுத்திப் போட்டாள். வாத்தி அழாக்குறையாய் நாலைஞ்சு வகுப்புக்களுக்கும் திருப்பி சோதினைப் பேப்பர் செற் பண்ணி, அதிபரிட்ட பேச்சு வாங்கி பெற்றார் பிள்ளையளைக் கெஞ்சிக் கூத்தாடி, மேலிடத்தில மெமோ வாங்கி சீரழிஞ்சுபோய் பிற்படுத்தப்பட்ட ஏரியாவுக்கு மாற்றலாகிப் போனார். அதோடை இவளுக்குக் கலியாண எண்ணமே வெறுத்துப் போச்சுது. முப்பத்தஞ்சு வயதிலை முதிர் கன்னியாய் நிக்கிறாள்.

அண்ணர் கலியாணத்துக்குச் சம்மதிச்சதும் நான் இந்திராவைத் தான் சிபாரிசு செய்தன். ஆனால் அம்மா எங்கடை தூரத்துச் சொந்த மச்சாளைக் காட்டினா. ஆரைக் கட்டிற எண்ட முடிவை அண்ணரிட்டையே விட்டம். ஆனால் நான் இந்திராவைப்பற்றியும் அவளின்ரை இயல்புகள் பற்றியும் அண்ணருக்கு எடுத்துச் சொன்னதிலை, அவர் இந்திராவிடை கண்சிமிட்டலைப் பொருட்படுத்தாமல் அவளையே கட்டச் சம்மதிச்சார்.

அண்ணருக்கு பிரான்ஸ் நாட்டின் குடியுரிமை இருந்ததால் பிரச்சினையில்லாமல் கலியாணம் முடிஞ்சு பொம்பிளையும் கெதியா வந்திட்டுது. மூண்டு கிழமை லீவிலை ஊருக்குப் போன அண்ணர், முதல் கிழமை பொம்பிளை பாத்து, அடுத்த கிழமை பொன்னுருக்கி, மூண்டாங் கிழமை தாலிகட்டி பிளைற் ஏறிட்டார். ஒரு மாதம் எங்கடை அம்மாவோடை கொழும்பிலை நிண்டிட்டு, மூண்டு மாதத்திலை இந்திராவும் பாரிஸூக்கு வந்திட்டாள்.

ஆனால் அண்ணர் கலியாணம் முடிஞ்சு வந்து "இந்திரா கண்ணும் சிமிட்டிறதில்லை. நீ சொன்ன மாதிரி கலகலப்புமில்லை. பம்பல் அடிக்கிறதும் இல்லை. நீ பொய் சொல்லிப் போட்டாய்" எண்டதும் அம்மா கொழும்பிலை இருந்து "என்ன உன்ரை பிறெண்ட் புடிச்சு வைச்ச பிள்ளையார் மாதிரி இருக்கிறாள். தலையிழுத்தால் பொட்டு வைக்கிறாள் இல்லை. பொட்டு வைச்சால் தலையிழுக்கிறாள் இல்லை. அந்த மாதிரிச் சமைப்பாள் எண்டாய். இஞ்ச வாயிலை வைக்க ஏலாது. சரியான நோனாவா இருக்கிறா. அவவுக்கும் நோகாம தும்புத் தடிக்கும் நோகா மத்தான் வீடு கூட்டிறா" என்றதும் எனக்கு ஆச்சரியமாய் இருந்தது. என்னோட போனிலை கதைக்கேக்கையும் கலகலப்பைக் காணயில்லை. புதுசாக் கலியாணம் செய்த வெக்கமாக்கும் எண்டுதான் இவளுக்காகவேண்டி அண்ணனோடும் அம்மாவோடும் வாதாடினன்.

ஆனால் இந்திரா வந்திட்டாள் எண்டு அவுட்டப் பாரிஸிலைமிருந்து ஆசையாய் ஓடிவந்து நேரிலை பார்க்கேக்குள்ளைதான் இந்திராவிலை பெரிய மாற்றம் நடந்திருப்பதும் இவள் பழைய இந்திராவே இல்லையெண்டதும் விளங்குது.

ஒண்டரை நாள் அவளைக் கவனிச்சாப் பிறகு, என்ரை மனுசனையும் பிள்ளையளையும் அஞ்சாறு மணித்தியாலத்துக்கு எங்கேயாவது போங்கோ எண்டு வெளியிலை கலைச்சுப் போட்டு அண்ணனையும் கூப்பிட்டு வைச்சு, என்ன பிரச்சினையெண்டு வடிவாச் சொல்லெண்டு இந்திராவைக் கேட்டன். மெல்ல மெல்லத்தான் கதைச்சாள்.

முப்பத்தஞ்சு வயதுவரை கலியாணம் இல்லாதது அவளுக்குப் பிரச்சினையாய் இல்லாட்டியும் அவள் குடும்பத்துக்குப் பிரச்சினையாய் இருந்தது. வீட்டாரின் நிம்மதிபோய், வீட்டின் சந்தோசம் தொலைந்திருந்தது. திருமண வயதையடைந்த தங்கச்சியும் இவளுக்காய்க் காத்திருக்க, ஊர் தன்ரை நாக்கையும் சுழட்டுது.

ஒரு குறையை மறைக்கப் பல திறமைகளை வளர்த்தும் பயனில்லை. கடைசிச் சந்தர்ப்பமான அண்ணற்ரை சம்மந்தத்தையும் தவறிவிட விரும்பவில்லை. கண் சிமிட்டலை நிப்பாட்டித்தான் கலியாணத்தை ஒப்பேற்ற வேணும் எண்ட வெறியிலை தன் கண்களைச் சிமிட்டாமல் இருக்க முயற்சித்தாள். அண்ணர் மாப்பிள்ளை பாக்கப் போகும் போது அவளின்ரை கண் சரியாகிமிட்டுது. வீட்டிலை எல்லாருக்கும் புழுகம். இந்தக் கலியாணம் ஒப்பேறிடும் எண்டு நம்பிச்சினம். ஒப்பேறிச்சுது.

ஆனால் இந்திரா தன்ரை சக்தியையெல்லாம் கண் சிமிட்டலை நிப்பாட்டிறதிலை காட்டினதாலை தன்ரை பல திறமைகளை இழந்து போனாள். இப்ப கண் சிமிட்டல் சரியாக, மற்றச் செயல்களெல்லாம் அசாதாரணமாய் சிலோமோசனுக்குப் போயிட்டுது.

உண்மை விளங்க நானும் அண்ணனும் ஏங்கிப்போனம். எனக்கு அழுகை வந்தது. அண்ணர் இந்திராவிடை ரெண்டு கைகளையும் பிடிச்சுக்கொண்டு அன்பாய் சொன்னார்.

"நீ கண் சிமிட்டுறது தெரிஞ்சு தானே ஓம் எண்டனான். எனக்கு நீர் கண் சிமிட்டுறது பிரச்சினையில்லை. நீர் பழைய மாதிரி கண் சிமிட்டிக் கொண்டு கலகலப்பாய் பம்பலாய் இருக்கவேணும்" எண்டார்.

இந்திராவுக்குக் கோபம் வந்தது.

"நல்லா உழைச்சன். நல்லா சமைச்சன். எவ்வளவு கெட்டித்தனமாய் இருந்தன். அப்ப சொன்னாங்கள் கண் சிமிட்டுறன் எண்டு. எல்லாத்தையும் விட்டன். கண் சிமிட்டுறதையும் விட்டன். இப்ப சொல்லுறாங்கள் கண்ணைச் சிமிட்டெண்டு. நீங்கள் சொல்லுறதெல்லாத்தையும் நான் கேப்பன். ஏனெண்டால் நானொரு பெண். ஆனால் என்ர கண் கேக்காது".

அவளை ஆறுதல்படுத்தத் தெரியாமல் அண்ணனும் நானும் திகைச்சுப் போனது என்னவோ உண்மைதான்.

நன்றி : **உயிர்நிழல்** – Uyirnizlal
Vol VI - No.2 - Issue 23
இதழ் 23. ஏப்ரல் - யூன்
2006 April - June 2006
27, RUE JEAN MOULIN,
92400, COURBEVOIE, FRANCE

# விளம்பரம்



*விளம்பரம்.*

*குளிப்பாட்டி*
*அழுக்காக்கிறான்*
*பெண்ணை....*

*தொலைக்காட்சியில்.*

நன்றி : 'காசி ஆனந்தன் நறுக்குகள்'

# தம்பிலுவில் ஜெகா

தம்பிலுவில் ஜெகா (திருமதி. ஜெகதீஸ்வரி நாதன்) வளர்ந்து வரும் பெண் கவிஞர்களுள் ஒருவர். இவர் தனது பன்னிரண்டாவது வயதில் தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலய மாணவ மன்றத்தில் **'அன்னை'** எனும் தலைப்பில் தனது கன்னிப் படைப்பை வாசித்து கவிதை உலகில் காலடி எடுத்து வைத்தார். அன்று முதல் கல்வி யுடன் இணைந்து கவிதையும் படைத்து வரலானார்.

1972ல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன "சிறுவர் மலர்" நிகழ்ச்சியில் இவரது **'கோவீல்'** என்னும் கவிதை முதன் முதலில் ஒலிபரப்பானது. அதனைத் தொடர்ந்து 'பூவும் பொட்டும்', 'வாலிப வட்டம்', 'ஒலிமஞ்சரி', 'இளைஞர் மன்றம்' போன்ற வானொலி நிகழ்ச் சிகளிலும், பல மரபுக் கவிதைகள் ஒலிபரப்பாயின. குறிப்பாக இளைஞர் மன்றம் நிகழ்ச்சியில் கொடுக்கப்படும் தலைப்புக்களில் இவர் எழுதிய 'மனக்கோலம்', 'விதியை வெல்ல முடிந்தால்', 'கானல்நீர்', 'அன்னைப் சுரந்து', 'விண்மீன்கள் விழியசைத்தால்' போன்றவை ஜெகாவின் கவித் துவத்தை வெளிப்படுத்திய கவிதைகளாகும்.

தினகரன், வாரமஞ்சரி, வீரகேசரி, சிந்தாமணி போன்ற பத்திரிகைகளில் இவரது ஐம்பதுக்கும் மேற்பட்ட கவிதைகள் வெளி வந்துள்ளன. இவர் சமுதாயப் பிரச்சினைகளையே தனது கருப்பொ ருளாகக் கொண்டு கவிதைகளை எழுதியுள்ளார். அத்துடன் 'கோகிலம்', 'தூது', 'காற்று' 'நிறைமதி' 'இதயசங்கமம்', 'இந்துமதி' போன்ற சஞ்சிகைகளிலும் எழுதியுள்ளார்.

1983ல் கல்முனைப் பிரதேசமான சாய்ந்தமருதில் இருந்து வெளியான 'கோகிலம்' எனும் சஞ்சிகைக்கு துணையாசிரியராகவும் இருந்துள்ளார். 1985 முதல் 1990ம் ஆண்டுவரை தம்பிலுவில் பொது நூலகத்தில் கடமையாற்றி யதுடன் 1990ல் கலைப்பட்டதாரியாகிய இவர் தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் ஆசிரியையாகக் கடமையாற்றுவதுடன் உயர்தர மாணவ ஒன்றியத்தின் பத்திரிகைப் பொறுப்பாசிரியராக இருந்து "கமலம்", "முத்தாரம்", "செந்தாமரை" போன்ற சஞ்சிகைகளையும் வெளியிட்டுள்ளார்.

ஜெகாவின் கவியாக்கத்திற்கு ஊக்கமளிக்கும் முகமாக முன்னாள் அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரான திரு. ஜே. திவ்வியநாதன் அவர்களின் ஆதரவில் 1993. 03. 14ம் திகதி முன்னாள் ஜனாதிபதி. கௌரவ. ஜே. ஆர். ஜெயவர்த்தனா அவர்களால் இவர் "கவிக்கோகிலம்" என்னும் பட்டமளிக்கப்பட்டு கௌரவிக் கப்பட்டார். 1996. 10. 18ல் நடைபெற்ற திருக்கோவில் பிரதேச சாகித்திய விழாவில் மட்டக்களப்பு கலாசார உத்தியோகத்தர் (முன்னாள்) செல்வி. தங்கேஸ்வரி கந்தையா அவர்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். 1998 இல் 'இன்னும் விடியவில்லை' என்னும் கவிதைத் தொகுப்பில் இவரது கவிதைகள் நூலாக வெளிவந்தன. இவரது தற்காலக் கவிதைகள் சில மட்டக்களப்பு சூரியா பெண்கள் அமைப்பின் 'பெண்' சஞ்சிகையில் வெளிவருகின்றன. ■



## ஏழ்மை

சதை பிடித்து
விடுகிறாள்


அழகு
நிலையத்தில்

எலும்புக் கைகளால்.

நன்றி : 'காசி ஆனந்தன் நறுக்குகள்'

# எழுந்திரு பெண்ணே!

**சுகந்தி இராஜகுலேந்திரா**
(சட்டத்தரணி)



**பெ**ண் உரிமை மாதர் உரிமை மகளிர் உரிமை எனப் பல பட தாய்க் குலத்தின் தளைகளை தகர்த்திட பல தளங்களிலிருந்து பல வாழ்க்கை வழிகளைக் கொண்டோர் புதினமாய் – புதுக் கவிதையாய் புரட்சி உரைகளாய் தீட்டுவதையும் உரைப்பதையும் படிக்கிறோம்; கேட்கிறோம். யார் இந்தப் பெண்? அவளைப் பிணைத்த விலங்குதான் என்ன? விலங்கினை விலக்கி உரிமை துலக்க உள்ள வழிதான் என்ன?

சிறை காக்கும் காப்பு முறையற்றது என்றுறைந்த வள்ளுவர் முதல் வீட்டுக்குள் பெண்ணைப் பூட்டும் விந்தை மனிதரைத் தொலைக்கும் சிந்தையை விதைத்த பாரதி தொடர்ந்து "பெண்ணின் பொருளாதார – அரசியல் நிலைகளை மேம்படுத்த உற்பத்தியிலும் அரசியல் செயற்பாட்டிலும் ஒன்றுபட்டு செயற்படுங்கள்" என்ற மா ஓவின் புரட்சிச் சிந்தனை வரை பெண்ணுரிமை இன்றைய பரிணாமம் பெற உழைத்தவர்கள் எத்தனை எத்தனையோ பேர்.

ஆணின் அரைப்பாகம் பெண் என்கிறது இந்துமதம். விலா எலும்பென்கின்றது விவிலியம். போற்றுதற்குரியது என்கிறது முகமதியம். 'சக்தி இல்லையேல் சிவம் இல்லை' சொல்லி மகிழ்கிறது சைவம். எல்லாம் ஏற்றிச் சொல்லவும் பெண்ணடிமை நிலையில் பெரிதாய் மாற்றம் காணோம்.

பெண்ணால் தான் விரிவு கண்டது வையம். மகளிரால் தான் மனை செய்தார். மனப்பண்பாடு வளர்த்தார். மழலையோடு மகிழும் வாய்ப்புப் பெற்றார். எல்லாம் அவரால் பெற்றாலும் தமக்குச் சமனாய் அவளை ஆக்கிப் பார்க்க ஆணின் மனமோ ஒப்பவில்லை.

வீட்டுக்கு நீ – வெளிக்கு நான் – வெளிச்சம் போட்டு உரத்த குரலில் ஓங்கி ஒலிக்கிறான் ஆண். ஏன் எனக்கு வெளி தெரியாதா என்ன? என்று கேட்டால் வழக்கம் என்கிறான்; மரபு என்கிறான்.

பண்பாடு என்கிறான்; மதத்தை ஆதாரத்துக்கு அழைக்கிறான். "ஊரார் என்ன சொல்வார். உலகம் என்ன கதைக்கும் நீ பேசாமல் அளந்து நட பதவிகள் வகித்தாலும் பட்டங்கள் பெற்றாலும் பட்டறிவு உற்றாலும் கட்டிய கணவனின் கட்டளைக்குக் கட்டுப்படத் தான் வேண்டும். கட்டளையின் குறையைக் கூற உரிமை இல்லை உனக்கு" என வாதம் செய்கிறார். பெண்ணுரிமை பற்றி ஆய்வேடு எழுதும் ஆண்களும் எல்லா உரிமைகளும் பெற்றுவிட்டார்கள் பெண்கள். படிப்பு – பதவி பெற்றுயர்ந்து உரிமை பெற்றுவிட்டனர் என்றே உரைக்கின்றார்.

உண்மை என்ன? ஆண்கள் உள்ளம் இன்னமும் பெண்ணை தனக்குச் சமானமாக மதிக்க – ஏற்க பக்குவப்படவில்லை.

வீட்டுக் கருமங்கள் குறித்த தீர்மானமா? ஆணே தீர்மானிக்கிறான். பெண் தீர்மானிக்க வேண்டுமாயின் அவனின் அனுசரணை – அனுமதி பெறவேண்டியுள்ளது.

ஓய்வு ஒழிவின்றி பெற்ற உரிமையின் தளத்தைப் பலப்படுத்தும் பல முனைகளில் போராட்டம் செய்கின்றனர் பெண்கள். சமுதாய அரங்குகள், சர்வதேச அரங்குகள், சட்ட அரங்குகள் எனப் பல தர அரங்குகளின் மூலம் உரிமையினைக் கூர்மையுறச் செய்ய முனைகின்றார். முயற்சி – முனைவு – அயர்ச்சியற்ற செயற்பாடு ஆனாலும் ஆமை வேகத்தில் தான் அறுவடை ஆகிறது.

சட்டங்கள் புதிதாய் ஆக்கப்பட்டு விட்டன. வன்முறைப்புணர்வு தான் பெண்ணின் மீது புரியப்படும்.

உடல்சார் குற்றம், அவளின் உரிமை மீறிய குற்றம் என இருந்த சட்டம் பாலுணர்வோடு பார்த்தால் சைகை செய்தால் இடக்கரடக்கலாய் இரட்டைப் பொருள் தோன்றும் இலக்கணத்தில் இயம்பினால் குற்றம் என்றாகிவிட்டது. இருந்தும் ஏந்திழையர் வருந்துகிறார் தாம் இன்னமும் அழுவதுமாய் உரிமை நிலைநாட்டப்பட வேண்டுமானால் அவளே அதற்காய் கிளர்ந்திட வேண்டும்; எழுந்திட வேண்டும்.


**"நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்"** என்ற பாரதியின் நாண் பூட்டிய வில் வார்த்தைகளை இதயத்தில் வரித்துக் கொள்ளட்டும். வேண்டிய வேளைகளில் அச்சொற்களை சம்மட்டியாக்குங்கள். அடிமைத்தனம் செங்கட்டியாகி தூள் தூளாகி விடும். பெண்ணின் பேடிமை – அச்சம் – அடிமைச்சிறுமதி அற்றுப்போகட்டும்.

**'அச்சம் நாணம் மடம் பயிர்ப்பு**
**எல்லாம் பழங்காலம். இனி,**
**உச்சம், ஞானம், திடம் உயிர்ப்பு**
**எங்கள் புதுக்கோலம்''**

என்ற கவிஞர் பிரியதர்ஷியின் வரிகள் வலுப்பெறட்டும். ■

# வெள்ளிவிழாக் கொண்டாடும்
# பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்

## (Women's Education Research Centre)



**பா**ல் நிலை விழிப்புணர்வு, சமூக ரீதியான பால்நிலைச் சமத்துவம் என்பவற்றிற்காக இருபத்தைந்து ஆண்டுகளின் சேவையை இவ்வருடம் பூர்த்தி செய்யும் பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம், 1982ல் பெண்கள் கல்வி நிறுவனம் என்னும் பெயரோடு ஆரம்பிக்கப் பட்டது.

1991ல் இந்த அமைப்பு பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம் என பெயர் மாற்றப்பட்டது. பெண்நிலை ஆய்வு என்பதைத் தனது முயற்சியின் ஒன்றாக உள்ளடக்கியதையிட்டு இப்பெயர் மாற்றம் உண்டானது.

பெண்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி, நாட்டின் பொருளாதார, அரசியல் சமூக தளங்களில் அவர்கள் ஆக்கபூர்வமாக ஈடுபடுவதற்குரிய வாய்ப்புக்களை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கவும் இன்னல்களை அனுபவிக்கும் பெண்களின் நிலையை வெளிப்படுத்துவதற்காகவும் சில பெண்நிலை வாத ஆய்வாளர்களாலும் செயற்பாட்டாளர்களாலும் இது தொடங்கப்பட்டது.

இக்குறிக்கோளை அடையும் பாதையில் பல போராட்டங்களையும் கஷ்டங்களையும் எதிர் நோக்கி வெற்றி கண்டுள்ளது. இதில் பல சமூக அமைப்புக்கள் உதவி, பக்க துணையாயிருந்தன.

இந்நிறுவனத்தின் முயற்சிகள் மூன்று மொழிகளிலும் ஒரு பாலமாகத் திகழவேண்டும் என்று அதற்கு இணைவாக ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்படும் ஆய்வுக் கட்டுரைகளை தமிழிலும் சிங்களத்திலும் மொழிபெயர்த்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

ஓரங்கட்டப்பட்ட பெண்களுக்கான வேலைத் திட்டங்கள், சுயதொழில் புரிவதற்கான பயிற்சிகள், சுனாமியால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான கல்வித் திட்டங்கள் எனப் பல் வேறுபட்ட செயற்பாடுகளிலும் இந்நிறுவனம் ஈடுபட்டுள்ளது.



ஆண்கள் மாத்திரமல்ல பெண்களும் கடினமான வேலை செய்ய முடியும் என்பதற்கேற்ப, சைக்கிள் பழுதுபார்த்தல், மின்சாரப் பழுதுபார்த்தல் போன்ற வேலைகளை பெண்களுக்குப் பயிற்றுவித்தது. ஆனால் இத்தகைய வேலைகளை தென் பகுதியிலிருக்கும் தனி பெண்கள் முன்வந்து செய்தபோதிலும், வட கிழக்கிலிருக்கும் போரினால் கணவனை இழந்து பாதிக்கப்பட்ட பெண்கள் தங்கள் பழம் சம்பிரதாயத்தின் நிமித்தம் முன்வரவில்லை. தையல் வேலைகள், சாப்பாட்டுக்கடை நடத்தல் போன்றவற்றைத்தான் விரும்பினர். சமுதாயத்தில் ஊறிப்போன பழக்க வழக்கங்களை மாற்றுவது மிகவும் கடினமானது என்று இது எடுத்துக் காட்டுகின்றது. நவீன மயப்படுத்தல் உலக மயமாக்கல் என்னும் தற்போதைய மாற்றங்களால் கூட இப்பெண்களை பழைய சம்பிரதாயங்களிலிருந்து விடுவிக்க முடியவில்லை.

தற்போது இந்நிறுவனம் ஓரங்கட்டப்பட்ட பெண்களுக்காக பலாங்கொடையில் 'காந்தா சக்தி' என்னும் நிறுவனத்துடன் இணைந்து முச்சக்கரவண்டி ஓட்டுவதில் பயிற்சியையளித்து வருகின்றது. இதற்குக் கிடைத்த நல்ல வரவேற்பு விரைவில் மக்கள் முச்சக்கர வண்டி ஓட்டும் பெண்களைக் காணக்கூடியதாக இருக்கும்.

கடந்த ஐந்து வருடங்களாக பெண்கள் கற்கைநெறி எனும் 4 மாதகாலக் கற்கை நெறியினை தமிழிலும் சிங்களத்திலும் நடத்தி வருகிறது.

ஆங்கிலத்தில் போதிய அறிவில்லாதவர்களால் பெண்கள் கற்கைநெறிச் சான்றிதழ் பெறுவது கைகூடாத ஒரு இலக்காக வேயிருந்தது. சான்றிதழ் வழங்கும் ஒரே ஸ்தாபனம் கொழும்பு பல்கலைக்கழகமாக இருந்தாலும் அவர்கள் பெண்கள் கற்கைநெறி மேற்படிப்புக்களை ஆங்கிலத்தில் மாத்திரமே நடத்துகிறார்கள். இந்நிறுவனத்தின் முன்னேற்றத்திற்குப் பங்களித்தவராகிய திருமதி. பேர்ணடீன் சில்வா 25ம் ஆண்டில் இறந்துவிட்டார்.

இந்நிறுவனம் கால் நூற்றாண்டைத் தாண்டி விட்டது. அதற்குக் காரணம் பெண் சமூக நலன்களில் மிகுந்த ஈடுபாடுள்ளவராகவும் பெண்நிலை வாதத்தில் மிக ஈடுபாடு கொண்டவராகவும் இயக்குனராகவும் இருந்த திருமதி.பேர்ணடீன் சில்வா அவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டமையே.

இந்நிறுவனம் **'பிரவாகினி'** எனும் செய்திமடலையும் மாதாந்தம் வெளியிட்டு வருகிறது.

**- செந்திரு -**

தொடர்புக்கு :

**பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்**
58, தர்மராம வீதி,
கொழும்பு - 06.
தொலைநகல் : 011-2596313,
தொலைபேசி : 011-2595296,
2590985
**மின்னஞ்சல் :** womendre@sltnet.lk

## பெண்நிலைவாதத்தின் தாய்

# சிமோன் தி போவுவா



-சுசீ-

(Simone de Beauoir)

சீமோன் தி போவுவா மறைந்து (1986 ஏப்ரல் 14ம் திகதி) இருபத்தியிரண்டு வருடங்களின் பின் இன்றும் சமகால பெண்நிலைவாதத்தின் தாயாகக் கருதப்படுபவர். சமூகத்தில் பெண்களிற்கு அளிக்கப்பட்டிருக்கும் நிலை என்ன என்பது குறித்த இவரது **'இரண்டாவது பால்'** 1949ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இந்நூல் எழுபதுகளில் அமெரிக்க மற்றும் பிரெஞ்சுப் பெண் நிலைவாதிகளுக்கு ஒரு பிரத்தியேக ஆலோசனைக் குறிப்பு நூலாக இருந்தது.

அந்நேரத்தில் மிகவும் சர்ச்சையைக் கிளப்பிய, "ஒருவர் பெண்ணாகப் பிறப்பதில்லை பெண்ணாக உருவாக்கப்படுகிறார்" என்ற கருத்தை முதலில் முன் வைத்த தத்துவவியலாளர். பால் சமத்துவம், பால் சுதந்திரம் என்பவற்றுக்கான போராட்டத்தைத் தன்னுடைய சொந்த வாழ்க்கையிலும் எழுத்துக்களிலும் முன்னெடுத்துச் சென்றவர். இவர் எப்போதும் கலகக்காரியாக, எப்போதும் முரண்பட்டவராக இருந்தார்.

"சிமோன் ஆணின் மூளையைக் கொண்டவள்". அவருடைய தந்தை இப்படித்தான் தன் மகளைப்பற்றிக் கூறினார். பாரிஸின் Saint Germain des Pres இன் புத்திஜீவிகள் கூட்டத்துடன் அவர் சேருவதற்கு முன்பு சிமோன்தான் போவுவா குடும்பத்தின் ஒளிவிளக்காக இருந்தார். இவர் 1908ம் ஆண்டு ஜனவரி மாதம் 9ம் திகதி பாரிஸில் பிறந்தார். இவருடைய தாய் ஒரு றோமன் கத்தோலிக்கர். மிகவும் கட்டுப்பாட்டுடன் இவர்களை வளர்த்தார். தன்னுடைய 15வது வயதில் La Famille Cornichon என்ற தனது முதலாவது கதையை எழுதுகின்றார். அப்போதே ஒரு பிரசித்தமான எழுத்தாளராகவே வர வேண்டும் என்று விரும்பியவர். பேரிலட்சியத்துடன் வாழ்வதற்கும் செய்பாட்டு நடவடிக்கைகளுக்கும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்குமான சக்தி தனக்கு எப்போதும் இருக்கவேண்டும் என்ற வேணவாவுடன் வாழ்ந்தவர்.

"எனக்கு ஒரு இலட்சிய நோக்கிருக்க வேண்டும். வெற்றிகொள்வதற்குப் பிரச்சினைகளும் அவற்றைச் செய்து முடிப்பதற்கான ஒரு குறிக்கோளும் தேவை" இப்படித் தனக்கு உறுதி செய்து கொண்டார். சிமோன் தனது நேரத்தின் பெரும்பகுதியை நூல் நிலையங்களிலே தான் செலவிட்டார். அதைத் தனக்கு அடைக்கலம் தரும் ஒரு இடமாகக் கருதினார் என்றுதான் சொல்லவேண்டும். 'லீப்னிஸ்' ஐயும், 'கான்ட்'ஐயும் படித்தார். அவர்களுடைய வீட்டில் வேலைக்காக அமர்த்தப்பட்டிருந்த பெண்ணை அவருடைய தாய் வீட்டைவிட்டு அனுப்பிவிட்டார். அது அவர்களுடைய குடும்ப கௌரவத்தின் இறுதி அடையாளம். தன்னுடைய குடும்பத்தில் நிகழ்ந்த சிதைவை மறப்பதற்காக என்பதுபோல் அவர் புத்தகங்களுக்குள்ளே மூழ்கிக்கிடந்தார். சிமோனுக்கும் அவருடைய தங்கை மடலினுக்கும் அவருடைய தந்தையார் மிகவும் திட்டவட்டமாகச் சொல்கிறார். "உங்களுக்குத் திருமணம் நடக்கப் போவதில்லை. ஏனெனில் உங்களிற்குத் தருவதற்கு என்னிடம் சீதனம் இல்லை" என்று. ஒரு கட்டத்தில் சிமோன் வீட்டைவிட்டு வெளியேறுகின்றார். ஒழுக்கமான, கட்டுப்பாடான குடும்பம் எனக் கருதப்பட்ட ஒரு குடும்பத்திலிருந்து வளர்ந்த ஒரு பெண் பிள்ளையின் முதலாவது சுதந்திரச் செயற்பாடு. கலகக்காரப் பெண்ணாக காதலைத் தேடுகின்றார். திருமணத்திற்கு காதலர்களைத் தேடினார்.

இவர் தத்துவவியலாளராகத் தனது கல்வியை முடிக்கிறார். 1929இல் இவர் சார்த்தரைச் சந்திக்கின்றார். இவர் அப்போதுதான் முதல் தடவையாக ஒரு ஆணை முத்தமிடுகின்றார். அப்போது சிமோனுக்கு 21 வயது. சார்த்தருக்கு 24 வயது. மிகச்சிறந்த இலட்சிய நோக்குக் கொண்ட இரு மாணவர்களும் இணைந்து வேலை செய்கின்றார்கள். அவர்கள் ஆராய்ச்சிக்குத் தெரிவுசெய்திருந்த விடயம் **'சுதந்திரமும் நிட்சயமின்மையும்'.** சார்த்தர் 1931இல் **La Nausee** என்னும் நூலை வெளியிடுகின்றார். அந்த நூலினால் அவர் சிமோனுக்கு முன்பே புகழடைகின்றார்.

சிமோன் 1943ம் ஆண்டுவரை ஆசிரியராகப் பணியில் இருக்கின்றார். எந் நேரமும் ஏதாவது சிந்தனையில் ஆழ்ந்திருக்கும் சார்த்தரின் அறிவு நுட்பத்தினால் சிமோன் கவரப்படுகின்றார். தன்னுடைய இன்னொரு வார்ப்பாக சார்த்தரைக் காண்கிறார். சார்த்தரும் அப்படியே. இவருடன் எல்லாவற்றையும் எதையும் பகர்ந்து கொள்ள முடியும் என்று எண்ணுகின்றார். இருத்தலியல் பற்றிய தொடர்ந்த உரையாடல்கள் இருவருக்குமிடையிலான தொடர்பில் முக்கியமான இடத்தைப் பற்றியிருந்தது. அவர்கள் இருவருக்குமிடையிலான 'தவிர்க்க முடியாத கட்டாயக் காதல்' என்பதானது 'நிச்சயமற்ற காதல்' என்று அவர் சொல்லும் ஏனைய உறவுகளுக்குத் தடையாக இருந்ததில்லை.

சார்த்தரும் சிமோனும் தங்கள் இருப்பிடங்களைத் தனித்தனியே பேணினார்கள். ஆனால் இருவரும் ஒரு உடன்படிக்கையில் இருந்தார்கள். அதாவது, 'காதலர்கள்' அல்லது 'இணைபிரியா எழுத்தாளத் தம்பதிகள்' என்ற பகிரங்கமான விம்பத்தை இறுதிவரை பொக்கிஷமாகப் பாதுகாப்பது. இந்த விசித்திரமான தொடர்பு அல்லது உறவு, விடுப்புக்கதைகளுக்கு வழிவகுத்தது என்பது அவர்களுக்குத் தெரிந்திருந்தது. எப்படி இருப்பினும், கட்டுப்பாடற்ற உறவைப் பேணிய இத்தம்பதிகள், தங்களுடைய வாழ்க்கைப் போக்கை பூர்சுவா மரபுத்துவத்தின் மீதான ஒரு விமர்சனமாகக் கொண்டனர். இவர்களுடைய நெருங்கிய நட்பும், ஒருங்கிணைந்த அரசியல் பங்களிப்பும் ஒருமித்தே இருந்தன.

சுதந்திரத்தின் பின், ஏறத்தாழ 30 வருடங்களாக, இடதுசாரிகளுடன் சகல போராட்டங்களிலும் இவர்கள் இணைந்திருந்தார்கள். Temps Modernes என்னும் சஞ்சிகையை 1945இல் ஆரம்பித்தமை, வியட்நாம் யுத்தம், அல்ஜீரிய யுத்தம் என்பவற்றுக்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டமை, கியூபாவில் பிடல் காஸ்ரோவிற்கு ஆதரவளித்தமை, இவற்றுடன் மே 68 இல் ஊர்வலங்களில் பங்களித்தமை என்பன.

சிந்தனா ரீதியான இணைவினால் போராட்டத்தில் ஈடுபடுதல் என்பது ஒன்றே அவர்கள் இருவரும் இணைந்திருப்பதன் ஒப்பந்தம். நிச்சயதார்த்தம் இல்லை. குழந்தைகள் இல்லை. அவரவர்க்குரிய சுதந்திரம் என்பது மிகுதி எல்லாவற்றையும் விட முன்நிற்பது. இலட்சியத்தை நோக்கிய ஓர்மமான பயணம். தன்னுடைய மறுவிம்பமான சார்த்தருடைய கையெழுத்துப் பிரதிகளை வாசிப்பதற்குச் செல்லாதபொழுது, நாளொன்றுக்கு 8 மணித்தியாலயங்களை எழுதுவதற்கென்று கட்டாயமாக சிமோன் ஒதுக்கினார்.

Temps Modernes சஞ்சிகையில் ஏராளமான கட்டுரைகளை சிமோன் எழுதினார். 1971ம் ஆண்டு தொடக்கம் அதன் நிர்வாகத்தினை சிமோன் கவனித்து வந்தார். பத்திரிகை நடத்தும் சமயத்தில் நிறையப் பயணங்களை மேற்கொண்டார். சீனா, யப்பான், கியூபா, சோவியத் யூனியன், எகிப்து, பிரேஸில், இஸ்ரேல், ஆபிரிக்கா, கனடா மற்றும் ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளிற்குச் சென்றார்.

1943ல் அவர் L'Invitee என்னும் தனது முதலாவது நாவலை வெளியிடுகின்றார். இந்நாவல் வெளிவந்ததன் பின்பு அவர் இந்நூற்றாண்டின் மிகப் பெரிய கலகக்காரியாக அடையாளம் காணப்படுகின்றார். சமூகத்தில் பெண்



களின் இரண்டாம் பட்சநிலை குறித்த '**இரண்டாவது பால்**' என்னும் நூல் ஒரு மோசமான எதிர்ப்புக்களுடன் கூடிய ஆத்திரமூட்டலை சகல மட்டங்களிலும் உருவாக்கியது. இத் தத்துவவியலாளர் பெண்களின் பொருளாதாரச் சுதந்திரம், திருமணபந்தம் விளைவிக்கும் பெண்களின் அந்நியமாதல் தொடர்பான விமர்சனம், சமூகத்தில் நிலவும் பால் அசமத்தும் மீதான எதிர்ப்பு என்பவற்றுக்கு முக்கியத்தும் கொடுக்கின்றார்.

“ஒருவர் பெண்ணாகப் பிறப்பதில்லை. பெண்ணாக உருவாக்கப் படுகின்றார்” என்னும் கருத்தை முன்னிறுத்தி பால்களிற்கிடையிலுள்ள வேறுபாடென்பது வெறுமனே உயிரியல் ரீதியானது மட்டுமல்ல என்று வாதிடுகிறார்.

இதற்கான எதிர்ப்புக் கருத்துக்களும் தீவிரவாதக் கருத்துக்களும் இருந்தபோதிலும் அவருடைய வாதம் செல்வாக்குச் செலுத்தியதை மறுக்க முடியாது. அந்தக் காலத்தில் சட்டத்திற்கெதிராக, களவாகச் செய்யப்பட்ட கருச்சிதைப்புக்களினால் எத்தனையோ பெண்கள் மரணிக்க நேர்ந்த போதும் கருக்கலைப்புக்கு மிகவும் ஆதரவாகச் செயற்பட்டவர். சொந்த விருப்பத்தின் பெயரில் செய்யப் படும் கருக்கலைப்புக்கான சட்டத்தைக் கொண்டு வருவதற்கு எழுபதுகளில் அமெரிக்க மற்றும் பிரெஞ்சுப் பெண் நிலைவாதிகளுக்கு ஒரு மிகப்பெரிய வழிகாட்டி நூலாக இவரின் '**இரண்டாவது பால்**' இருந்தது. இது சர்வதேச ரீதியாக மிகப்பெரிய அதிர்வலைகளைத் தோற்றுவித்ததுடன், வெற்றியும் பெற்றது. இவர் தனியே இருத்தலியல்வாதிகளில் ஒருவர் மட்டுமல்ல. பெண்களுக்காக, பெண்களின் சுதந்திரத்திற்காகத் தன்னை அர்ப்பணித்துப் போராடினார்.

1954ம் ஆண்டில் இவருடைய Les Mandarins என்னும் நூல் வெளியாகின்றது. சார்த்தர் தன்னுடைய மறுபாதியைப் பார்த்துப் பெருமையடைகின்றார். இவர்களுக்கிடையில் தற்பெருமைக்கான போட்டிகள் இருக்கவில்லை. இந்த இருபெரும் திமிர் பிடித்தவர்களுக்கிடையிலான உறவுகள் எப்போதுமே சுமுகமாக இருக்கமுடியாதென்று நாங்கள் கற்பனை செய்திருந்தாலும் ஐம்பதுகளில் சிமோர் சார்த்தரைப் போலவே பிரசித்தமாகவும் செல்வந்தராகவும் இருந்தார். இருவருடைய நண்பர்களும் பொதுவானவர்களாகவே இருந்தார்கள் - தத்துவவியலாளர் Maurice Merleau Ponty, கவிஞர் Raymond Queneau, கவிஞர் Jacques Prevert, பாடகி Juliette Greco இப்படி. ஒரே கபே பாரிற்குத் தான் இருவரும் செல்வார்கள்.

இருபது வயதிலேயே தனக்கென்று ஒரு பெயரை நிலைநிறுத்திக்

கொள்ள விரும்பிய சிமோன், அதிலிருந்து 30 வருடங்களிற்குப் பின்பு எந்தவிதமான தாட்சண்யமும் இன்றித் தன்னுடைய கடந்த கால வாழ்க்கையைப் பகுத்தாய்ந்து பல பாகங்களாக எழுதுகின்றார். Memories d'une fille rangee (1959) தொடக்கம் Tout Compte Fait (1972) வரை தனிநபர் வாதத்தைக் கேள்விக்குள்ளாக்குகிறார். தன் இளமைக்காலத்தில் அரசியலின்மையாக, அரசியல் வறுமையாக இருக்க நேர்ந்ததற்காக வருந்துகிறார். நாடு நாசிகள் வசப்பட்டிருந்தபோது தன்னுடையதும் சார்த்தரினதும் சாத்வீக செயற்பாடுகளுக்காகவும், கட்டாயமற்ற காதல்களினால் ஏற்படும் கீறல்கள் - காயங்கள் - பிழைகள் பற்றியும் குறிப்பிடுகின்றார். 1980இல் ஏற்பட்ட சார்த்தரின் மரணம் இவரை வெகுவாகப் பாதித்தது. இவர் 1986ம் ஆண்டு ஏப்ரல் 14ம் திகதி அன்று, தன்னுடைய பிரசித்தமான துணையான சார்த்தரின் இழப்பின் பின்னான ஆறு வருடங்களில், மறைகிறார்.

*பால் சமத்துவம், பால் சுதந்திரம் என்பவற்றுக்கான போராட்டத்தை தன்னுடைய சொந்த வாழ்க்கையிலும் எழுத்துக்களிலும் முன்னெடுத்துச் சென்றவர் சிமோன் தி போவுவா.* ■

## பெண்மை

*தெரிவது*
*உனக்கு*
*அவள்*
*கண்களில்*

*வண்டும்*
*மீனும்*
*பூவும்.*

*தெரிவதில்லை*
*கண்ணீர்.*



**நன்றி : 'காசி ஆனந்தன் நறுக்குகள்'**



# மட்டக்களப்பு பெண்கள் அபிவிருத்தி ஒன்றியம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் வறுமைக்கோட்டின்கீழ் வாழ்கின்ற மக்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதைப் பிரதான நோக்கமாகக் கொண்டு செயற்பட்டுவரும் நிறுவனமே பெண்கள் அபிவிருத்தி ஒன்றியமாகும். (W.D.F)

1994ம் ஆண்டிலிருந்து செயற்பட்டு வரும் ஒன்றியம் மக்களது சமூகப் பொருளாதார வளங்களை மேம்படுத்தும் நோக்கத்தைப் பிரதானமாகக் கொண்டு ஏனைய உள்ளூர், வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைந்து பல அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

வடக்கு, கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டத்தில் (NECCDEP) மட்டக்களப்பில் உள்ளன. மாநகர சபைக்குட்பட்ட பத்துக் (10) கிராமங்களில் கட்டுமான வேலைகள், மக்கள் விழிப்புணர்வுத் திட்டங்கள், சிறுகடன் உதவிகள் போன்ற திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட நாவற்குடா கிழக்கு, மஞ்சந்தொடுவாய் தெற்கு, நொச்சிமுனை, கல்லடி வேலூர் ஆகிய கிராமங்களும், நெக்டொப் கிராமங்களான வீச்சுக்கல் முனை, திருப்பெருந்துறை, திமிலைதீவு, புதுநகர், நாவற்குடா தெற்கு, மஞ்சந்தொடுவாய் வடக்கு ஆகிய கிராமங்களிலும் மக்களது வாழ்வாதாரத்தை அபிவிருத்தியடையச் செய்வதில் பெண்கள் அபிவிருத்தி ஒன்றியம் செயற்பட்டு வருகின்றது.

வறுமைக்கோட்டின்கீழ் தமது வாழ்க்கையை நடத்திவரும் பெரும்பாலான மக்களுக்குத் தேவைப்படும் வீதிகள், பொதுக் கிணறுகள், குழாய்க் கிணறுகள், மீன்பிடியாளர்கள் தங்கும் அறைகள் என பல உட்கட்டுமான வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நெக்டொப் கிராமங்களுக்கு ரூபா நாற்பது (40) லட்சத்திற்கு மேற்படாத தொகையும், சுனாமியால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு ரூபா ஐம்பது (50) லட்சத்திற்குரிய அபிவிருத்தி நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களுக்கு அவர்களது வாழ்க்கைத் தரத்தைக் கூட்டுவதற்காக சிறுகடன் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. கோழி, ஆடு, மாடு வளர்ப்பதற்கும், சிறு வியாபாரம், சிறு கைத்தொழில் என்பவற்றைச் செய்வதற்கும் உதவி வழங்கப்படுகின்றது.

சுற்றாடல் பாதுகாப்பு சம்பந்தமான விழிப்புணர்ச்சியை உண்டுபண்ணும் கலந்துரையாடல்கள், தெருக்கூத்துக்கள் (Street Drama) ஆகிய நிகழ்ச்சித் திட்டங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

பெண்கள் அபிவிருத்தி ஒன்றியம் 'கெயார்' (Care) போன்ற அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்தும் சில அபிவிருத்திச் செயற்பாடுகளை (வாழ்வாதாரம்) செய்து வருகின்றது. இவற்றுடன் தேசிய அபிவிருத்தி ஒன்றிய நிதியத்துடன் (N.D.T.E.) பதிவு செய்துகொண்டு மக்களுக்கு சிறுகடன் வழங்கி அவர்களது வாழ்க்கைத்தரத்தை அதிகரிப்பதற்கு கடன் வழங்கும் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளது. கஷ்டமுறும் மக்களுக்குத் தொழில்வாய்பை வழங்கும் பொருட்டும், பெண் கள் அபிவிருத்தி ஒன்றியத்தின் நிதி வளத்தைக் கூட்டுவதற்குமாக சீமெந்துக் கல் மற்றும் வேலித் தூண்கள் (Foundation Post) அறுக்கும் நிலையம் ஒன்றையும் நடத்தி வருகின்றது. இவ்வாறான பல செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் பெண்கள் அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவரும், மாவட்ட இணைப்பாளருமாகிய திருமதி. சோமாவதி சிவசுப்பிரமணியம் அவர்கள் செயற்பட்டு வருகின்றார். இவருடன், செயலாளர், பொருளாளர் ஆகிய பதவிகளிலும் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் பதவிகளிலும் பெண்களே முக்கிய பங்கினை வகிக்கின்றனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கி வரும் ஒருசில பெண்கள் அமைப்புக்களில் W.D.F. சிறப்பாகக் குறிப்பிடத்தக்க பங்கினை வகித்து வருகின்றது.

**எஸ்.எதிர்மன்னசிங்கம்**
திட்ட இணைப்பாளர்,
பெண்கள் அபிவிருத்தி ஒன்றியம்,
மட்டக்களப்பு.

## தளை



கணவனின்
ஒப்புதல்
கேட்கிறாள்
'பெண்கள்
விடுதலை'
அமைப்பில்
சேர.

நன்றி : 'காசி ஆனந்தன் நறுக்குகள்'



# அலுவலகங்களில் பெண்கள்



வசந்தி தயாபரன்

மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமாம்! பெண்களாய்ப் பிறவி எடுப்பதே பெறற்கரியதோர் பேறாம்; என்றெல்லொம் கேட்டும் படித்தும் வளர்ந்தவர்கள் நாம். ஆயினும் நடைமுறை வாழ்வு, இக்கருத்துக்களுடன் முரண்படுகிற தாய், பல்வேறு வினாக்களை எழுப்புவதாய் எம்முன் விரிந்து கிடக்கிறது.

பெண்கள் வேலை பார்ப்பது ஒன்றும் புதிய விடயமேயல்ல. பெண்ணின் திறமை குறித்த சந்தேகங்கள் என்றோ பொய்யாய்ப் பழங்கதையாய்ப் போயின! அதேவேளை, பெண் தொழிலாளி கள் படும்பாடுகளுங் கூட நாமறியாதன அல்ல. நமது நாட்டிலே, பெருந்தோட்டத்துறையிலும் சுதந்திர வர்த்தக வலயத்திலும், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களிலும் பெண்களின் அவலநிலை சொல்லும் தரமன்று! அவர்கள் குறித்துப் பலரும், பல மேடைகளிலும் பேசுகிறார்கள். நிச்சயம் பேசப்படவும் வேண்டும். அவர்களது நிலையைப் போல் மோசமானதாக இல்லாவிடினும், அலுவலகங்களில் தொழில்புரியும் பெண்களுக்கும், பால் நிலை சமத்துவம் (Gender Equality) தொடர்பான பல பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன.

செப்டெம்பர் 2007 இல், பிறஸில்ஸில் *(Brussels)* நடைபெற்ற 'தொழில் புரியும் பெண்களுக்கான மாநாடு' விடுத்த அறிக்கையின்படி

1) உலகின் 2.9 பில்லியன் தொழிலாளரில் 1.2 பில்லியன் பெண்கள் (40%)
2) உலகின் ஏழைத் தொழிலாளிகளில் 65% பெண்கள்.
3) உலகளாவிய ரீதியில் ஆண்களைவிடப் பெண்களின் வருமானம் 20% - 30% வரை குறைவானது.

உலகளாவிய ரீதியில் பெண்களின் நிலை இவ்வாறு புள்ளி விபரங்களால் காட்டப்படுகிறது. ஆனால் பெண்கள் குறித்த சமூகத்தின் பார்வைதான் என்ன? மரபு ரீதியான சிந்தனைகளும் பிம்பங்களும் ஆழப் பதிந்துவிட்ட சமூகத்தின் ஒரு

வெட்டுமுகத்தையே நாம் அலுவலகங்களிலும் தரிசிக்கிறோம். தாம் காலங்காலமாக வரித்துக் கொண்ட கருத்துக்களை மீளாய்வு செய்யவோ புதிய சிந்தனைப் போக்குகளை அறிந்துகொள்ளவோ மறுக்கின்ற மனிதர்கள், எங்குமிருக்கிறார்கள். இது ஒட்டுமொத்த ஆணினத்துக்கும் எதிரான குற்றச்சாட்டல்ல! நெகிழ்வுத் தன்மையற்ற, அகலித்த பார்வையற்ற சிலரைப் பற்றியே நாம் பேசுகிறோம். இறுகி, உறைந்துவிட்ட இந்தப் போக்கானது, பெண்ணின் மேம்பாட்டிலே நேரடியாகவும் முறைமுகமாகவும் பல அழுத்தங்களை ஏற்படுத்துகிறது. அவற்றில் சிலவற்றைப் பட்டியலிடுவதும் அவற்றுக்கான தகர்ப்பு முறைகளை ஆராய்வதுமே இக்கட்டுரையின் நோக்கங்களாகின்றன.

**1) அலுவலகங்களில் பெண்கள் எதிர்நோக்கும் அழுத்தங்கள் :**

கடமைகளில் ஒத்துழைப்பு வழங்காமல் சக ஊழியர்களால் தனிமைப்படுத்தப்படல். அசௌகரியமான சூழலில் வேலை செய்ய நேர்தல் என்பன, பெண்ணை மிகவும் மோசமான உள நெருக்கடிக்கு ஆளாக்குவன. வேலைப் பளுவைத் தன்னந்தனியே சுமப்பது இலேசானதோர் விடயமல்ல!

அவ்வாறே, பெண் மேலதிகாரியின் கீழே வேலை செய்தல் தொடர்பான சிக்கல்களும் சிலருக்கு உண்டு. அங்கு பெண்ணின் பதவிநிலைசார் குரல், அதிகாரக்குரலாகத் தப்பர்த்தம் செய்யப்படுகிறது.

**2) விமர்சனங்கள் :**

பெண்ணின் நியாயமான முன்னேற்றங்கள், பதவி உயர்வுகள் என்பன, ஒழுக்கப் பிறழ்வுக்கான சன்மானங்களென, பொறுப்பற்ற விமர்சனங்களுக்கு உள்ளாகின்றன. கிண்டல் பேச்சுக்களாக, கீழ்த்தரமான சொல்லாடல்களாக என்று இவை பல அவதாரங்களை எடுக்கின்றன.

**3) ஓரங்கட்டல் :**

அலுவலகங்களில் பொறுப்பான இடங்களை வழங்காமல், பெண்ணை ஒரு மூலையில் தூக்கிப் போடல், சாதனைகள் புரியவேண்டும் என்ற ஆவலும், ஆற்றலும் அமுக்கப்பட்டு, பெண்ணின் ஆளுமை நசுக்கப்படுகிறது.

**4) தொழிற்சங்க நடவடிக்கைகள் :**

பெண் என்பவள், போராட்டங்களில் இணைந்து கொள்கின்ற தேவையும் தகைமையும் அற்றவள் என்று தீர்ப்பு விதிக்கப்படுகிறாள். அதையும் மீறி இணையுமிடத்து, அவள் பெண்ணே அல்ல - ஆணை ஒத்தவள் என்று வர்ணிக்கப்படுகிறாள்.



**5) உடல் ரீதியான தொந்தரவுகள் :**

இது அடிக்கடி பேசப்படுகின்ற விடயம். பெண்ணின் சுயகௌரவம் கேள்விக்குறியாக்கப்படுகின்ற அவல நிலையினை, அவள் சகித்துப் போக வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறாள். பெண்ணின் அகம் - புறம் இரண்டையும் ஒருங்கே ஒடுக்கும் ஒரு செயற்பாடிது. மன உளைச்சலுக்கு ஆளாகும் பெண், தன் கடமைகளைச் சரிவரச் செய்ய இயலாதவள் ஆகிறாள்.

**அழுத்தங்களைத் தகர்த்தல் :**

அலுவலகங்களில் கடமைபுரியும் பெண்கள், தம்மீதான ஒடுக்குமுறைகளுக்கு எதிராக, ஒரு போராட்ட முறைமையை வகுத்துக் கொள்ள வேண்டும். இது ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட தகர்ப்பு முறையாக அமைதல் அவசியமாகிறது.

**1) விழிப்புக்குழுக்கள் – அமைப்புக்கள் உருவாதல் :**

பெண் என்ற பொதுமை நிலையில் ஊழியர்கள் ஒன்றுபடும் போது, கடைநிலை - உயர்நிலை என்ற பேதமின்றி எல்லோரும் கைகோர்க்கும் நிலை உருவாகும். உரிமைகள் துண்டாடப்படாமல் வெல்லப்படவும் முடியும். அப்போது, தனது பிரச்சினைகளுடன் தான் கையறு நிலையில் விடப்பட்டதாக எந்தவொரு பெண்ணும் மறுகமாட்டாளல்லவா! அவளது பிரச்சினைகள் உற்றுக் கேட்கப்பட அவற்றுக்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட, இணக்கமான சூழல் அவளை உயிர்ப்பிக்கும்.

**2) கல்வி வழங்கல் :**

பெண் அமைப்புக்கள் முன்னெடுக்க வேண்டிய பெரும்பணி இது! தத்தமது துறையில் புலமை மேம்படவும், தமது உச்சத்திறனைச் சமூக மேம்பாட்டுக்கு வழங்கவும் விரும்பாத பெண்கள் இருக்க முடியாது. இச்செயற்பாடு அவர்களது பதவியுயர்வுக்கான வாய்ப்புக்களை அதிகரிப்பதாய் மிகவும் உவப்பானதாய் இருக்குமென்பதில் சந்தேகமில்லை.

தமது சட்டபூர்வமான உரிமைகள், அவை மீறப்படுமிடத்து பெறக்கூடிய சட்ட உதவிகள் பற்றியெல்லாம் அறிந்துவைத்துள்ள பெண்கள் எத்தனைபேர்? இவை பற்றிய அறிவூட்டலுக்கும் இக்கல்வித் திட்டத்தில் இடமளித்தல் நன்மை பயக்கும்.

சுய முகாமைத்தவப் பயிற்சிநெறிகள், உளரீதியாகப் பெண்களின் ஆற்றலை அதிகரிப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. தன்னில் ஊறிவிட்ட தயக்கங்களிலிருந்து விடு

பட்டு, தன்னைத்தானே முகாமை செய்துகொள்ள, பெண் தலைப்பட வேண்டிய காலம் கனிந்துவிட்டது. பெண் தனது அறிவையும் ஆற்றலையும் செழுமைப்படுத்த இத்திட்டம் வழி சமைக்கும்.

**3) பாதுகாப்பு :**

அலுவலகக் கடமைகளில் காலந் தாழ்த்தி ஈடுபடவேண்டிய பெண்களுக்குப் பாதுகாப்பான சூழல் ஏற்படுத்தித்தருவது தொழில் கொள்வோரின் பொறுப்பாகும். தவிர, கர்ப்பிணித் தாய்மார், பாலூட்டும் தாய்மார் என்போருக்குச் சுகநலம் பேணலுக்கான வசதிகளும், அமைதியான சூழலும் அத்தியாவசிய தேவைகளாகின்றன. இவற்றைப் பெற்றுக் கொடுக்கப் பெண் அமைப்புக்கள் ஆவன செய்ய வேண்டும்.

**4) தொழிற்சங்கங்களில் முக்கிய பங்கு:**

வெறுமனே எண்ணுக்கணக்குக்காக அல்லாமல், முடிவெடுக்கும் அதிகாரம் கொண்ட தொழிற்சங்கப் பதவிகளுக்கும் பெண்கள் தெரிவாக வேண்டும். பெண்களின் சமத்துவம் தொடர்பான எழுவினாக்களை *(Issues)*, பெண்களை விட வேறொருவரால் சரியானபடி முன்வைக்க இயலுவது ஐயத்துக்குரியதே! அரசின் கொள்கை வகுத்தலிலும் இவற்றுக்கு உரிய தீர்வுகளை இணைத்துக்கொள்ளுமாறு வற்புறுத்தப்பட வேண்டும்.

**5) இட ஒதுக்கீடு பேணல் :**

ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு என்பவற்றில் வெளிப்படைத்தன்மை பேணப்பட வேண்டும். பெண்களுக்கான இட ஒதுக்கீட்டில் இத் தன்மை இல்லாதபோது, அதுவும் மறைமுகமானதோர் அடக்குமுறையினையே சுட்டி நிற்கிறது. நிர்வாகக் கட்டமைப்பானது, பெண்களின் அதிகரித்த பங்களிப்புக்கு இடம்தரல் வேண்டும்.


தொழிற்துறைகளில் மென்மேலும் பெண்கள் இணைகின்ற அதேவேளை, கால ஓட்டத்தில் உருவாகும் புதிய பிரச்சினைகளும் அவளை வந்து மோதுகின்றன. பெண், தனது இலக்குகளை நோக்கி ஓயாது போராட வேண்டியவள் ஆகிறாள்! எனவேதான் பெண் அமைப்புக்கள் தம்மிடையே வலைப்பின்னலைக் கொண்டிருத்தலும் காலத்தின் இன்றியமையாத் தேவையாகிறது.

பெண், மானுடத்தின் ஒரு கூறு! அலுவலகத்தில் பெண்களைச் சக



ஊழியராக, தோழமைக் கண்ணோட்டத்தில் நோக்க ஆண்கள் முன்வர வேண்டும். பெண்ணின் கௌரவத்துக்குப் பங்கம் ஏற்படாத இடங்களாக அலுவலகங்கள் மாற வேண்டும். பெண்ணை பெண்ணின் கருத்து நிலையிலேயே புரிந்துகொள்தல் அவசியம்! அதற்கு, அலுவலகச் சமூகத்தின் சிந்தனைப் போக்கில், புரட்சிகரமான மாற்றங்களை, மனித குலமே வேண்டி நிற்கிறது. ■

## பால்



*என்னைத்*
*தெய்வம்*
*ஆக்கினாய்.*

*சிவன் பாதி*
*சக்தி பாதி*
*என்றாய்.*

*ஏமாற்றாதே –*

*உன்*
*பால் வேறுபாடு*
*அழுத்தமானது...*

*சிவனுக்கு*
*பசுப்பாலும்*
*சக்திக்கு*
*கள்ளிப்பாலும்.*

நன்றி : 'காசி ஆனந்தன் நறுக்குகள்'

## அஞ்சலி!



27.02.2008 அன்று சென்னையில்
காலமான தமிழ்நாட்டு எழுத்தாளர்
**சுஜாதா (சீ.ரங்கராஜன்)**
அவர்களுக்கு 'செங்கதிர்' இன்
அஞ்சலி!

# கே.சுஜீவா



"மட்டுநகர் அழகான மேடையம்மா இங்கே எட்டுத் திசையும் கலையின் வாடையம்மா" இங்கே எட்டுத் திசையிலும் கலையின் வாடை வீசுவது மட்டுமல்ல, இங்கு பிறந்த பல கலைஞர்கள் உலகின் எட்டுத் திசையிலும் கலையின் வாடையைப் பரப்பி வருகின்றார்கள்.

இந்த வகையிலே மட்டுநகர் பாலமீன் மடுவைப் பிறப்பிடமாகக் கொண்ட கே.சுஜீவா மிகவும் பிரபலமான ஒரு பாடகியாக பெரும்பான்மை மக்களிடையே சிங்கள மொழியிலே பாடி பெரும் புகழையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளார்.

இன்று எந்த ஒரு சிறப்பான சிங்கள இசை நிகழ்ச்சி இலங்கையிலே நடந்தாலும் அதிலே நிட்சயமாக கே.சுஜீவா பாடுவார். மக்கள் இவரது பெயரைக் கேட்டதுமே கரகோசம் எழுப்பி இவரது துள்ளிசைப் பாடலுக்கு ஆடி மகிழ்வதை எத்தனையோ முறை தொலைக்காட்சியிலே காணக்கூடியதாக இருந்தது.

இவர் மட்/வின்சன்ட் மகளிர் பாடசாலையிலே தமிழில் கல்வி பயின்று, பின் கண்டியிலும் கொழும்பிலும் கல்வியைத் தொடர்ந்ததிலே சிங்கள மொழியிலே மிகவும் தேர்ச்சி பெற்றதுடன், வாழ்க்கைத் துணைவராக சுனேத்கலும் எனும் இசைத் துறையிலே புகழ்பெற்ற கலைஞரும் சவுண்ட் எஞ்சினியருமான பெரும்பான்மை இனைத்தைச் சேர்ந்தவரைத் தெரிந்து எடுத்ததிலே இவரது இசைத்துறை மேலும் முன்னேற வாய்ப்பமைந்தது.

சுனேத்கலும் சிங்கள இசைத் துறையிலே நல்ல புகழுடன் இருக்கும் இசையமைப்பாளரும் கூட. சிங்களப் படம் ஒன்றிற்கு இசையமைத்துள்ள இவர் இரண்டு மாதங்களுக்கு முன் அந்தப் படத்தின் முக்கியமான சவுண்ட் எடிட்டிங்குக்காக சென்னை சென்றிருந்தார். இவரின் செயற் திறனைக் கண்ட இந்தியத் தயாரிப்பாளர் தமது படத்திற்கு இசையமைத்துத் தருமாறு வேண்டியுள்ளார். இவர்களது வீட்டிலேயே "மியூசிக்கல் வேக் சொப்" எனும் அதிநவீன சவுண்ட் ஸ்டுடியோ ஒன்றும்



உண்டு. தம்பதிகள் இருவரும் சேர்ந்தே அனேகமாக இசை அமைக்கின்றனர். காரணம், கே.சுஜீவா கர்நாடக இசையை முறையாகப் பயின்று பட்டம் பெற்றவர்.

இதுமட்டுமல்ல, இவரது இசை வாழ்வுக்கு ஆரம்பமே இவரின் பெற்றோர்களும், சகோதரனும், சகோதரியுந்தான். தாயான ஏஞ்சல் கருணைரெத்தினமும் தகப்பன் கிறிஸ்டோபர் கருணைரெத்தினமும் 1960களில் இலங்கை வானொலி சிங்கள சேவையிலே "சாளகீ" எனும் நிகழ்ச்சியிலே சிங்களத்திலே பாடுபவர்கள். சிறுபிள்ளை கூட பெயரைச் சொன்னதும் அறிந்து கொள்ளும் புகழ் வாய்ந்த பாடகி நிலாமதியும், வானொலியிலும், தொலைக்காட்சியிலும் எந்த நேரமும் விளம்பரங்களிலும் முக்கியமான இசை நிகழ்ச்சிகளிலும், இசை இளவரசர்கள் தெரிவுக் குழுவிலும் உள்ள புகழ்வாய்ந்த மகிந்தக்குமாரும் இவரது அக்காவும் அண்ணனுமாவர்.

வெளிநாடுகளிலே தொழில்புரியும் பெரும்பான்மை மக்கள் அங்கு நடைபெறும் இசை நிகழ்ச்சிகளிலே பங்குபற்ற எப்போதும் இவரை அழைப்பார்கள். சென்ற இரு மாதங்களில் டுபாய், டோகா ஹட்டார், கொரியா போன்ற நாடுகளுக்குச் சென்று வந்த சுஜீவா நான்கு V.C.D.அல்பங்களை வெளியிட்டுள்ளார்.

இதிலே இவருக்குப் பெயர் தேடித் தந்ததும் இவரைச் சிங்கள இசையுலகிற்கு அறிமுகப்படுத்திய துமான "தறுறான" எனும் வெளியீடு மிகவும் பிரபலமானது. இதைப் பத்து மொழிகளிலே பாடப் போவதாக டெய்லி மிரரிலே அறிவித்த இவர் முதலில் ஹிந்தி மொழியிலே வெளியிட்டுள்ளார். இவரது தகப்பனார் பிரஞ்சு மொழியிலே உல்லாசப் பயணிகளை வழிநடத்தும் விரிவுரையாளராதலால் இதைப் பிரெஞ்சு மொழியிலே பாட அவர் உதவி புரிகிறார். அதன் பிறகு ஜெர்மன், ஸ்பனிஸ், இத்தாலி போன்ற பாஷைகளிலும் பாடுவதுதான் இவரின் குறிக்கோள்.

ஒரு தமிழ்ப் பெண்ணாக இருந்து சிங்கள மக்களிடையே பெரும் புகழுடன் பாடிவரும் இவர், இரண்டு இனத்திற்கு மிடையே ஒரு பாலமாகவுள்ளார்.

இடையிடையே தொலைக்காட்சியிலும், மேடைகளிலும் தமிழ் நிகழ்ச்சிகளிலே கலந்துகொள்கின்ற இவர், சென்ற வருடம் நடந்த "சுப்பர் ஸ்டார்" தெரிவு நிகழ்ச்சிலே அறிவிப்பாளராகவும் கடமைபுரிந்தார். சில தமிழ் தொலைக்காட்சி நாடகங்களிலும் நடித்துள்ள இவர் கர்நாடக இசையையும் பரத நாட்டியத்தையும் முறையாகப் பயின்று அரங்கேற்றியவர்.

இவரது இசைப் பயணம் மேலும் மேலும் வளரட்டும். ■

சிறுகதை

# சொற்காத்துச் சோர்விலாள் பெண்

யோகேஸ்வரி கணேசலிங்கம்

ஊசி விழுந்தால் கேட்கும் என்று சொல்வார்களே! அப்படி ஒரு நிசப்தம் அந்த மண்டபத்தில் நிலவியது.

மண்டபம் நிறைந்த கூட்டம்! மண்டபத்தில் இருந்த அத்தனை பேரின் கண்களும் மேடையில் நின்று பேசிக்கொண்டிருந்த வானதியின் மீது பதிந்திருந்தன. வானதியின் வாயிலிருந்து வார்த்தைகள் தங்குதடையின்றி வந்துகொண்டிருந்தன. தான் பேசுவதற்கு எடுத்துக்கொண்ட பொருளை அழகுற பழமொழிகள், உதாரணங்கள் போட்டு பேசிக்கொண்டிருந்தாள். வார்த்தைகள் ஆற்றொழுக்காக வந்துகொண்டிருந்ததால் கூட்டத்தில் இருந்தோரிடையில் எழுந்து செல்லவோ ஒருவரோ டொருவர் பேசவோ முற்பட வில்லை. மந்திரத்தால் கட்டுண்ட வர்களாக வானதியைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தார்கள்.



அழகாக வாரி இழுத்த கூந்தல், மிக எளிமையான ஒரு பட்டுப் புடவை, அதற்கேற்ற சட்டை, கழுத்தில் ஒரு மெல்லிய சங்கிலி, நெற்றியில் ஒரு குங்குமப்பொட்டு. இதுதான் வானதியின் அலங்காரம்.

உதட்டுச்சாயம், முகப்பூச்சு, புடவையின் நிறத்துக்கு ஏற்ற மணிமாலைகள் எதுவும் அவளிடம் கிடையாது. பார்ப்பவர்கள் இன்னொரு முறை பார்க்கத் தூண்டும் ஒரு மதிப்புள்ள தோற்றம், கம்பீரமான ஆனால் அழகான அங்க அசைவுகள். அவளோடு



தொடர்புகொள்ள விரும்பும் முகப்பொலிவு.

இத்தனை அம்சங்களுடன் தனக்குக் கொடுக்கப்பட்ட ஒரு மணிநேரத்திற்குள் தன் உரையை முடிப்பதற்காக கோர்வை பிசகாது பேசிக்கொண்டிருந்தாள்.

அது ஒரு ஞாபகார்த்த உரை. நம் மத்தியில் நன்கு வாழ்ந்து மறைந்து போன ஒரு பெரியாரின் நினைவுரை.

வானதியைத் துரத்தித் துரத்திப் பத்திரிகைக்காரர் வந்தார்கள். "ரெலிபோன் பண்ணிவிட்டு வீட்டுக்கு வாங்கோ. இப்போ நான் அவசரமாகப் போக வேண்டும்" என்று கூறிவிட்டு வேகமாக வானதி காரில் ஏறினாள்.

கையிலிருந்த பூச்செண்டைப் பார்த்தாள். ரோஜாப்பூக்களாலான அழகான பூச்செண்டு. இதைக் கொண்டுபோனால் ஒரு சில நாட்கள் வாடாமால் இருக்கும். வீட்டிற்கும் அழகு சேர்க்கும். ஆனால் இந்தப் பூச்செண்டைக் கொண்டுபோனால் கணவன் நாகராஜன் கொதித்தெழுவான். ஏதாவது தகாத வார்த்தைகளால் என்னைத் திட்டுவான். இந்தப் பூச்செண்டால் நான் என் சந்தோஷத்தை இழந்துவிடுவேன்.

தனக்குள் விரக்தியாகச் சிரித்துக் கொண்டாள் வானதி. அவள் கண்முன் சில வருடங்களின் முன் நடந்த சம்பவம் ஒன்று நிழலாடியது.

இப்படித்தான் அவள் பணிபுரியும் பாடசாலையில் நடந்த கூட்டம் ஒன்று முடிந்து மாலையும், கையுமாக வீட்டிற்குள் நுழைந்தாள்.

அன்றும் இதேபோல பலரது பாராட்டைப் பெற்றுவிட்டு வந்தவளது மனதில் பெரும் சந்தோஷம்.

மாலையும் கையுமாகக் கதவைத் திறந்தவளை கூடத்திலிருந்து தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த கணவன் நிமிர்ந்து பார்த்தான். கூட்டம் எப்படி? எப்படிப் பேசினாய்? யார் வந்திருந்தார்கள்? இப்படியான கேள்விகளை என்றுமே கேட்காதவன் நாகராஜன். அவன் சுபாவம் தெரிந்ததால் எந்தவித எதிர்ப்பார்ப்புக்களும் இன்றி வானதி உள்ளே நுழைந்தாள். படார் என கதவை அடித்துச் சாத்தியவன், "இந்த மாலையைப் போட்டவனோடு போயிருக்கலாமே? வழிதவறி

இந்த வீட்டிற்கு வந்துவிட் டாயோ?''குதர்க்கமாக அனல் கக்கும் வார்த்தைகளை வீசினான்.

திகைத்துப்போய் நின்ற வானதி, கணவனைச் சுட்டெரிப்பது போலப் பார்த்தாள். வாய்திறந்து பேசி தனது மரியாதையை இழக்க அவள் விரும்பவில்லை. தனது கோபத்தைப் பார்வையால் காட்டினாள். தான் ஏதோ பெரிய ஒரு கேள்வியைக் கேட்டுவிட்ட நினைப்பில் நாகராஜன் பலமாகச் சிரித்துவிட்டு உள்ளே சென்று விட்டான். இது நடந்து பல காலமாகிவிட்டபோதிலும் வானதியின் நெஞ்சில் அந்தத் தழும்பு இன்னும் இருந்து கொண்டேயிருந்தது.

பள்ளிக்கூடம் போவது, ஆசிரியர்களையும், மாணவர்களையும் சந்திப்பது, கூட்டங்களுக்குப் போவது இவையே இன்று அவளுக்குப் புத்துணர்ச்சியைக் கொடுக்கிறது. அவளை வாழ வைக்கின்றது.

வானதி, நாகராஜன் திருமணம் ஒரு விபத்து. தந்தையைச் சிறு வயதில் இழந்தவள் வானதி. தாயார் தான் இருக்கும்போதே மகளுக்கு நல்ல ஒரு வரன் பார்த்து முடித்துவிட வேண்டும் எனத் துடியாய்த் துடித்தாள். படிப்பு, பண்பு, அழகு எல்லாம் நிரம்பிய வானதிக்கு வந்து வாய்த்தவனே படிப்பு இருந்தும் பண்பில்லாதவன்.

தன்னிலும் பார்க்க அறிவாலும், ஆற்றலாலும் கூடியவளான வானதியின் கெட்டித்தனம் நாகராஜனுக்குப் பொறாமையை வளர்த்தது. சிறு பொறியாக அவன் உள்ளத்தில் தோன்றிய அந்தப் பொறமைத் தீ இன்று வளர்ந்து கொழுந்துவிட்டு எரிந்துகொண்டு இருக்கிறது. கணவனைப் பற்றி முழுக்க அறிந்த வானதி கணவனோடு முரண்டு பிடிக்காது ஒரே கூரையின் கீழ் இரு கோடுகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறாள்.

தலைக்கு மேலே சுழன்ற மின்விசிறியிலும் வேகமாக வசந்தியின் மனம் சுழன்றது.

எத்தனை பெரிய கூட்டம்! எத்தனை மதிப்பு! எத்தனை மரியாதை! வானதியோடு கதைப்பதையும் அவளைத் தெரியும் என்பதையும் பெருமையாகக் கருதும் பலர்.

ஆனால் வீட்டிலோ அவள் கணவனுக்கு, அவள் ஒன்றும் தெரியாத ஒருத்தி. அவள் செய்கையில் பிழைபிடிக்கக்



காத்திருக்கும் ஒருவன். அவள் பிழைகளைப் பெரிதுபடுத்தி அவளை நோகடிக்கும் ஒரு அற்பன். வாழ்க்கை என்பது எல்லோருக்கும் சரியாக அமைந்து விடாது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமான வாழ்க்கை கிடைக்கிறது. தன்னோடு படித்த பவளம் அவள் கணவன் கண்களுக்கு அழகுராணி! எல்லாம் தெரிந்த ஒருத்தி!

கனகமோ தனது சுண்டுவிரலால் கணவனை ஆட்டுகிறாள்! ஸ்ரீதேவியின் சிறுசிறு பெரு மைகள் அவள் கணவனுக்குப் பெரும் சாதனைகள்!

நெஞ்சத்திலிருந்து ஒரு பாரிய நெடுமூச்சு!

இவர்களை நினைத்து என்ன பயன்? என் கணவன் என்னைப் பாராட்டாமல், ஊக்குவிக்காமல் இருந்தாலும் என்னை வெளியே போக அனுமதிக்கிறாரே. அதுவே போதும்.

தன்னைத் தானே தேற்றிக்கொண்டு படுக்கையில் புரண்டவளை நித்திராதேவி மெதுவாக அணைத்துக்கொண்டாள். காலையில் எழுந்தவளுக்கு பத்திரிகைக்காரர் பேட்டி எடுக்க வரப்போகிறார்கள் என்ற ஞாபகம் வந்தது. அரக்கப்பரக்க எழுந்து வேலைகளை முடித்த பின் தன்னைப் பேட்டிக்குத் தயார்படுத்திக் கொண்டாள்.

நாகராஜன் வீட்டில் இல்லை என்பது அவளுக்கு நிம்மதியைக் கொடுத்தது. காலையிலேயே எங்கோ சென்றுவிட்டான். வருபவர்களுடன் சுதந்திரமாகப் பேசிக்கொள்ளலாம் என்ற ஒரு மனத்திருப்தி.

வாசல் மணி அடித்ததும் கதவைத் திறந்து வந்தவர்களை உள்ளே அழைத்தாள் வானதி.

சொல்லி வைத்தாற்போல நால் வரும் ஒன்றாக வந்திருந்தார்கள். பிரபல பத்திரிகையின் வார இதழுக்குப் பேட்டிகாண வந்த இளம் பெண் பாமதி, நாகரா ஜனின் சகோதரியின் மகள். எல்லோரும் தத்தமது இருக்கைகளில் இருந்தபின் பேட்டி ஆரம்பமானது. எல்லோ ரும் ஒரே மாதிரியான கேள்வி களைக் கேட்டார்கள். வானதி யின் இளமைப்பருவம், பேச்சாற் றலுக்கான காரணம், பொது வாழ்வு என எல்லா அம்சங்க ளும் கேட்கப்பட்டன. "மேடம்! கடைசியாக ஒரு கேள்வி. உங்க ளுடைய புகழிலும் முன்னேற்றத் திலும் உங்கள் கணவனுடைய பங்கு என்ன?''

"என் கணவர் என்னைத் தட்டிக் கொடுக்கிறார். அவர் இல்லையென்றால் இந்த உயரத்திற்கு நான் வந்திருக்கமாட்டேன். ஒரு ஆணின் வெற்றியின் பின்னால் ஒரு பெண் இருப்பதுபோல, எனது வெற்றிக்கு என் கணவன் பங்கு பெரும் இடத்தை வகிக்கின்றது" வானதி கூறக் கேட்டவர்கள் அதனைக் குறித்துக் கொண்டனர்.

அப்படியே இருங்கள். உங்களை ஒரு போட்டோ எடுக்கப் போகிறோம். கூறியபடியே போட்டோ எடுத்தவர்கள் நன்றிகூறிக் கைகூப்பி வணங்கிய பின் வெளியேறினார்கள். பாமதி வெளியே போகவில்லை.

"மாமி! நான் உங்களிடம் இன்னொரு கேள்வி கேட்கப்போகிறேன்" என்ன கேள்வி என்பது போல வானதி கண்களை உயர்த்தி பாமதியைப் பார்த்தாள்.

"மாமி உங்கள் கணவன்தான் உங்கள் உயர்வுக்குக் காரணமானவர் என்று எப்படி இப்படிப்பட்ட அப்பட்டமான பொய்யைச் சொன்னீர்கள்? உங்களைப் போல ஒரு பெண்ணின் வாயிலிருந்து இப்படி ஒரு பொய் வந்திருக்கலாமா?" துணிச்சலுடன் கேட்டபோதும், மாமியிடம் தான் மரியாதைக் குறைவாக நடந்துவிட்டேனோ என அவள் மனம் பயப்பட்டது.

"பாமதி! நீ துணிச்சல்சாலிதான். மனதில் வைத்திருக்காமல் கேட்டுவிட்டாய். இப்படி உட்கார்" என்று சொல்லியவள் தானும் எதிரே உட்கார்ந்தாள்.

"பாமினி! இண்டைக்கு நான் திருமதி.வானதி நாகராஜன். என் பெயருக்குப் பின்னால் உள்ள என் கணவன் பெயர் இல்லாமல் செல்வி. வானதியாக நான் இருந்திருக்கப் படாதோ என்று பல தடவைகள் வேதனைப்பட்டுள்ளேன். இந்த நாகராஜனை விவாகரத்துச் செய்வதை நான் விரும்பவில்லை. என் வாழ்நாளில் முக்கால்பங்கு முடிந்துவிட்டது. மிகுதி கால்பங்கையும் திருமதி. நாகராஜனாகக் கழிக்க விரும்புகின்றேன். அதனால்தான் என் கணவனுடைய குறைகளையும் அல்பத்தனத்தையும் நான் வெளியே சொல் வதில்லை. அது தான் நான் 'அவர் தான் என் உயர்வுக்குக் காரணம்' என்று கூறினேன்". தெளிவாகவும் உறுதியுடனும் வானதி கூறினாள்.

தான் திறமைசாலியாக இருந்தும் தன்னை வெறுக்கும் கணவனை விட்டுக் கொடுக்காத வானதியைப் பெருமையுடன் பார்த்தாள் பாமதி. செய்வதறியாது அவளை இறுக அணைத்துக்கொண்டாள். இருவர் கண்களிலும் கண்ணீர் மல்கியது. ■





# சித்திரலேகா மௌனகுரு

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மொழித்துறைத் தலைவியாகப் பணிபுரியும் இவர், தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயின்று, கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர். பின்னர், பின் பட்டப்படிப்பினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், நெதர்லாந்தின் சமூக ஆய்வு நிறுவனம் (Institute of Social Studies) ஆகியவற்றில் மேற்கொண்டு பட்டங்கள் பெற்றவர்.

ஈழத்து இலக்கியம், விமர்சனம், பண்பாடு, பெண்ணியம் என்பன இவரது ஆய்வுப் புலங்களாகும். இத்துறை சார்ந்த ஆய்வுக் கட்டுரைகளையும் நூல்களையும் எழுதியதுடன் 'சொல்லாத சேதிகள்' (1986), 'சிவரமணி கவிதைகள்' (1993), 'உயிர் வெளி' (1999) ஆகிய பெண்கள் கவிதைத் தொகுப்புக்களின் பதிப்பாசிரியருமாவார்.

இனத்துவமும், சமூக மாற்றமும் (1985) கைலாஸ் (1988), வாய்மொழி மரபுகள் வரலாற்று மூலங்களாக (2004) முதலிய ஆய்வு நூல்களின் பதிப்பாசிரியரான இவர் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்குப் பல ஆய்வுக் கட்டுரைகளையும் நூல்களையும் மொழி பெயர்த்துமுள்ளார்.

# எல்லைதாண்டும் பொருளும் மொழியும் : இலங்கையில் பெண்கள் கவிதை

சித்திரலேகா மௌனகுரு

"உங்களுடைய வரையறைகளின்
சாளரத்துக்குப் பின்னால்
நீங்கள் என்னைத் தள்ள முடியாது
இதுவரை காலமும்
நிரந்தரமாக்கப்பட்ட சகதிக்குள் கிடந்து
வெளியே எடுத்து வரப்பட்ட
ஒரு சிறிய கல்லைப்போன்று
நான்
என்னைக் கண்டெடுத்துள்ளேன்
என்னுடைய நாட்களை நீங்கள்
பறித்துக் கொள்ள முடியாது
கண்களைப் பொத்திக் கொள்ளும்
ஒரு குட்டி நட்சத்திரம் போன்று
எனது இருத்தல்
உறுதி பெற்றது
நிராகரிக்கப்பட முடியாதவள் நான்...."

(சிவரமணி கவிதைகள் : 1993)

சமகால இலங்கைத் தமிழ் இலக்கியத்தின் முக்கிய போக்குகளில் ஒன்றாகப் பெண்களின் இலக்கியம் அமைகிறது. குறிப்பாக பெண்கள் கவிதை என அடையாளம் காட்டக்கூடியதான ஒரு போக்குப் பலமாக நிலைபெற்றுள்ளது. மேலே நான் காட்டிய சிவரமணியின் "அவமானப்படுத் தப்பட்டவள்" என்ற கவிதையின் பகுதி பெண்களது கவிக்குரலின் ஒரு அடையாளமாகும். தன்னைத்தானே உணர்தலின் ஆழம், பெருமிதம், உறுதி ஆகியவற்றைப் புலப்படுத்தும் வரிகள் இவை.

தமிழ் இலக்கியத்தில் பெண்களின் பங்களிப்பை சங்ககாலத்திலிருந்தே காணலாமாயினும் அவற்றைப் "பெண்கள் இலக்கியம்" (Women's Literature) எனக் கருத்து நிலைப்படுத்தும் போக்கு 1980களிலிருந்தே ஆரம்பமாயிற்று. பெண்கள் இலக்கியம், பெண்நிலை இலக்கியம், பெண்கள் இலக்கியப் பாராம்பரியம், பெண்நிலை இலக்கிய விமர்சனம் முதலிய தொடர்கள் இலக்கியம் தொடர்பான எழுத்துக்களிலும் விவாதங்களிலும் இடம்பெறத் தொடங்கின.

1986ம் ஆண்டு 'சொல்லாத சேதிகள்' என்ற தலைப்புடன் பெண்கள் கவிதைத் தொகுதியொன்று வெறிவந்தது. பதினொரு பெண்களின் இரு பத்திநான்கு கவிதைகள் அடங்கிய சிறு தொகுதி அது. இத்தொகுதியின் அறிமுக உரை பின்வருமாறு குறிப்பிடுகிறது.

**"...பெண்கள் தமது உணர்வுகளையும் எண்ணங்களையும் கருத்துக்களையும் ஆற்றல்களையும் இயல்பாக வெளியிடுவதற்கும் தமது திறன்களை வளர்த்தெடுப்பதற்கும், தமது ஆக்கங்களைத் தனிப்படப் பிரித்து நோக்குவது அவசியம் என உணரத் தலைப்பட் டுள்ளனர். பெண்களிடையே 'பெண்' என்ற இந்த நிலைப்பாடு தோன்றியுள்ள இக்காலகட்டத்தில் நாம் பெண்களுக்கான ஒரு கலை இலக்கிய நெறியை உருவாக்குவது முக்கிய தேவையா கும்.... பெண்களது படைப்புக்களை ஒருசேரத் தொகுத்துப் பார்க்கும் போதுதான் அவற்றின் பண்புகளும் இயல்புகளும் தெரிய வரும்".**

(சொல்லாத சேதிகள் : 1986)

1986 ஆம் ஆண்டிற்குப் பின்னர் இன்றுவரை பெண்களது பின்வரும் கவிதைத் தொகுதிகள் வெளியாகியுள்ளன.



| | | |
|---|---|---|
| 01) | சொல்லாத சேதிகள் | - 1986 |
| 02) | காதோடு சொல்லிவிடு - பாரதி | - 1992 |
| 03) | கஸ்தூரியின் ஆக்கங்கள் | - 1992 |
| 04) | வானதி கவிதைகள் | - 1994 |
| 05) | மறையாத மறுபாதி | - 1993 |
| 06) | கோசல்யா கவிதைகள் | - 1993 |
| 07) | சிவரமணி கவிதைகள் | - 1993 |
| 08) | விலங்கிடப்பட்ட மானுடம் - சுல்பிகா | - 1993 |
| 09) | செல்வி. சிவரமணி கவிதைகள் | - 1996 |
| 10) | கனல் | - 1997 |
| 11) | காலங்கள் - கிருஷாந்திரட்ணராஜா | - 1998 |
| 12) | உயிர்வெளி | - 1999 |
| 13) | எல்லை கடத்தல் - ஔவை | - 2000 |
| 14) | உரத்துப்பேச - ஆழியாள் | - 2000 |
| 15) | உயிர்த்தெழல் - சுல்பிகா | - 2001 |
| 16) | வெளிப்படுதல் | - 2001 |
| 17) | எழுதாத உன் கவிதை | - 2005 |
| 18) | றஞ்சினி கவிதைகள் | - 2005 |
| 19) | ஓவியம் வரையாத தூரிகை (மருதமுனை அனார்) | - 2005 |
| 20) | துவிதம் - ஆழியாள் | - 2006 |
| 21) | எனது கவிதைக்கு எதிர்த்தல் என்று பெயர் வை (பெண்ணியா) | - 2006 |
| 22) | இருளில் சலனமற்றுக் கரையும் நிழல்கள் -ஆகர்ஷியா | - 2006 |

மேலே குறிப்பிட்ட கவிதைத் தொகுதிகளையும் சஞ்சிகைகள், பத்திரிகைகள் ஆகியவற்றில பிரசுரமாகும் கவிதைகளையும் ஒருசேர வைத்து நோக்கும்போது முக்கியமான விடயம் ஒன்று புலனாகிறது. இக்கவிதைகளின் பொருளும் வடிவமும் மொழியும் தற்காலத் தமிழ்க் கவிதையுலகிற்கு ஒரு புதிய பரிமாணத்தை அறிமுகப்படுத்தியுள்ளன. இதுவரைகாலம் நிலவிய பெண்களின் சிந்தனை முறை. மொழிவழியான வெளிப்பாட்டு முறைமைகள் ஆகியவற்றிலிருந்து வேறுபட்டு, விட்டு விடுதலையாகி புதிய கருத்துக்களை யும், புதிய மொழி வீச்சையும் இவை அறிமுகம் செய்கின்றன. அந்தவகையிலே பெண்களின் கவிதையானது பொருளிலும் மொழியிலும் விதிக்கப்பட்டிருந்த எல்லையைத் தாண்டியுள்ளது. ■

-வெளிவரவுள்ள 'பெண், அனுபவம், இலக்கியம்' எனும் நூலிலிருந்து.-



# பெண்களென்றால் பொம்மைகளா....?

- ஷாமலா ஸ்டீவன் -

எல்லாப் பெற்றோருக்கும் தங்கள் பிள்ளைகளின் வாழ்வு சுபிட்சமாக அமைய வேண்டும் அதை தங்கள் கண்களால் கண்ட பிறகே இவ்வுலகை விட்டுப்பிரிய வேண்டும் என்ற ஆசை பொதுவாகக் காணப்படும்.

கட்டுக்கடங்காத பிள்ளையாய் ஒருவன் வளர்ந்துவிட்டான் என்றால் அவனைத் திருத்துவதற்கான வேறெந்த முயற்சியையும் செய்யாமல் திருமணம் ஒன்றே அதற்கான பரிகாரம் என நினைப்பது வேடிக்கையானது.

திருமணத்தின் முன் ஊதாரியாகச் சுற்றித்திரிந்த ஒருவனுக்கு திருமணத்தைச் செய்து வைத்தால் திருந்தி வாழ்வான் என்ற நம்பிக்கையில் யாரேனும் ஒரு பெண்ணைத் தேடிப் பிடித்து திருமணம் செய்து வைத்து விடுகிறார்கள். ஆனால் திருமணத்தின் பின் அந்தப் பெண்ணின் நிலை என்னவாகும் என்பதனை எவரும் சிந்திப்பதில்லை.

இந்த விஷயத்தைப் பொறுத்தவரை பெண்களை பலிக்கடாவாக்குவது மன்னிக்க முடியாத குற்றம்.

இவ்வாறான கணவன்மார் திருந்தி வாழ்வதென்பது 10 சதவீதமேனும் சாத்தியப்படுதல் சந்தேகமே. அப்போது அவர்களை நம்பி வந்த பெண்ணின் நிலை....? அவளுக்கு யார் துணை..?

திருமணத்தின் பின் மனைவி, பிள்ளைகள் என்று குடும்பமாக வாழ வேண்டிய கணவன் தன் இஷ்டப்படி வாழ முயலும் போது பெண்களினதும் பிள்ளைகளினதும் பரிதாப நிலையை யாரிடம் சொல்லியழ?

திருமணத்தின் முன் நன்றாக வாழ்ந்த பெண்கள் திருமணத்தின் பின் உணவுக்கே வழியில்லாமல் திண்டாடி பின் உயிரையே மாய்த்துக்கொள்ள நினைக்கும் அளவிற்குத் தள்ளப்படுகிறார்கள் என்றால் விவாகரத்து செய்வது சாதாரண விடயமாகக் கருத வேண்டியுள்ளது.

ஒன்று பிள்ளைகளை நன்றாக வளர்த்திருக்க வேண்டும், அல்லது அவர்கள் திருந்திய பின் திருமண ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதைவிடுத்து ஒரு பெண் நினைத்தால் எதையும் சாதிக்கலாம் என்ற தோரணையில் அவள் வாழ்க்கையில் விளையாடுவது பாவச் செயல்.

மனைவி பேச்சைக் கேட்பவனாக இருந்தால் பரவாயில்லை. ஓரளவுக்கேனும் திருந்தி வாழ சந்தர்ப்பம் ஏற்படும். ஆனால் வாயே திறக்கமுடியாத அளவுக்கு அடி, உதை என்று எத்தனை நாட்கள்தான் காலத்தைக் கடத்துவது?

நண்பர்களுடன் சேர்ந்து குடித்து, கும்மாளமடித்து, ஊரைச் சுற்றித்திரிந்து வீட்டிற்கு வருவார்கள். அவர்களுக்குச் சாப்பாடு மட்டும் தயாராக இருக்கவேண்டும். இல்லாவிட்டால் வீடே இரண்டாகிவிடும். வருமானம் ஒன்று இல்லாதவிடத்து சாப்பாடு எங்கிருந்து வரும்? பிள்ளைகள் நன்றாக வாழ்கின்றார்கள் என்று நினைத்துக்கொண்டு பெற்றோர்கள் இருந்துவிடுவார்கள். ஆனால் ஊதாரிப் புருஷனுடன், கையில் குழந்தையுடன் பெண்கள் படும்பாட்டைச் சொல்லில் அடக்க முடியாது.

இவ்வாறான சூழ்நிலைகளும் பெண்களை வழிமாறிச் செல்ல வைக்கின்றது. விவாகரத்து வாங்காமலேயே நிம்மதியைத் தேடி வேறொரு நபருடன் வாழ்க்கையைத் தொடங்க முயல்கிறார்கள். அதன்பின்பு நகர வேதனையை அனுபவிக்கிறார்கள். இவற்றுக்கெல்லாம் மூல காரணம் இப்படியொரு திருமணத்தை ஏற்படுத்திக் கொடுத்தவர்கள் தானே?

"எவ்வளவுதான் கஷ்டம் வந்தாலும் ஒரு நல்ல குடும்பப்பெண் இப்படியெல்லாம் நடந்துகொள்ள மாட்டாள்" என்று சிலர் அப்பெண்ணை மட்டுமல்ல குடும்பத்தாரையும் சேர்த்தே உதாசீனம் செய்வார்கள்.

பெண்களென்றால் பொம்மைகளா? அவர்

களுக்கென்று உணர்ச் சிகள் இல்லையா? எதையும் அனுபவிக்கும் போது தான் சகிப் புத்தன்மை ஏற்படும். அந்த சகித்தலின் உச்சக்கட்டம்தான் விரக்தி. விரக்தியின் பிரதிபலன் தான் துணிச்சல்.

வாழ்க்கையில் விரக்தி ஏற்பட்டுவிட்டால் அதன் பின் அவர்களுக்கு என்ன நடந்தாலும் பரவாயில்லை. யார் என்ன பேசினாலும் பரவாயில்லை என்கிற துணிச்சலில் தான் பிழையான காரியங்களையும் செய்யத் துணி கிறார்கள். இதை வெளியிலிருந்து படமாகப் பார்ப்பவர்களால் உணர்ந்துகொள்ள முடி யாது.

எனவே, உங்கள் குடும்பத்தில் இம்மாதிரி யான நபர்கள் இருப்பின் வேறு யாதேனும் உத்திக ளைக் கையாண்டு அவர்க ளைத் திருத்தும் முயற்சி யில் ஈடுபடுங்கள். அதை விடுத்து வீணாக ஒரு பெண்ணின் வாழ்க்கையில் விளையாட எத்தனிக்கா தீர்கள்.

நன்றி : **மைவிழிப்பார்வையில்**
(மாதர் கட்டுரைகள்)



## ஆணாதிக்கம்

எப்படியும்

இருக்கலாம்

ஆணின்
திமிர்...

திரௌபதைக்கு
கணவன்
ஐந்தாகவும்.

அர்ச்சுனனுக்கு
மனைவி
ஐந்தாகவும்.

நன்றி : 'காசி ஆனந்தன் நறுக்குகள்'



செங்கதிரோன் எழுதும்



# விளைச்சல்

1 குறுங்காவியம்

(கவிஞர் நீலாவணனின் 'வேளாண்மை'க் காவியத்தின் தொடர்ச்சி...)

வேளாண்மைக் காவியம் (1) குடல் (2) கதிர் என இரு பகுதிகளைக் கொண்டது. அதன் தொடர்ச்சியான 'விளைச்சல்' காவியம (3) காய் (4) பழம் எனத் தொடரும்.

## 3.காய்

### பார்வதிப் பெத்தாவின் ஆசை

அன்னம்மா சமைந்து நாள்கள்
ஆண்டுகள் ஆகியோட
எண்ணமே செல்லன் ஆகி
ஏங்கினாள். ஓர்நாள் பெத்தா
"என்னடீ...! கனகம் மாவுன்
இளையவன் கலியாணத்தை(க்)
கண்ணைநான் மூடு முன்னம்
காணத்தான் ஆசை" என்றாள்.

"அண்ணன்ட மகன்தான் செல்லன்
ஆனாலும் அவன் என்னத்த
எண்ணித்தான் இருக்கிறானோ?
ஏனென்டா.... பாண்டியூரார்
பெண்ணுக்குக் கேட்டுப் போகப்
போறாராம்?" கனகம் கூற
பார்வதிப் பெத்தா சொன்னாள்,

"பொன்னுவக் கேட்டுப் பார்த்தன்
பொடியனும் சம்மதந் தான்
கொண்ணன்தான் வந்து கேட்டா
கொடுக்காம விடுவனா நான்....
சொன்னனாம் கந்தப்போடி
சொந்தந்த விடுவானா.... பார்!
விண்ணாலக் கதய உட்டு
விசயத்தப் பாரு புள்ள"

### *அழகுப்போடியின் பதில்*

அம்மையும் மகளும் பேச

அழகியும் காதில் கேட்டு

"சும்மாநாம் போகலாமா....?

சூட்டையும் அடிக்க வேணும்!

இம்மாதம் முடிந்த பின்னர்

இருத்தையும் கழியுட் டுங்கா!

சம்மதம் கேட்டுப் போவம்....

சரிதானே...! கனகம்" என்றார்

### *அன்னம்மாவின் ஆனந்தம்*

அடுப்படிப்பக்கம் நின்றே

அப்பனின் பதிலைக் கேட்டு

கொடுப்புக்குள் சிரித்த வண்ணம்

குதூகலித்திருந்த அன்னம்

துடுப்புக்கள் வலிக்கப் பாயும்

தோணி போல் ஓடிக் கட்டில்

நடுப்புறம் வீழ்ந்தாள். போன

நாளெல்லாம் நினைவில் மீளும்!

**(இன்னும் விளையும்)**

*அடுத்த இதழிலிருந்து.....*




**வாசகர்களின் வினாக்களுக்கு இப்பகுதியில் விடை அளிக்கப்படும். கலை. இலக்கியம் சார்ந்த வினாக்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.**


அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர், 'செங்கதிர்',
இங்கே விடை.எங்கே வினா?
இல.19, மேல்மாடி வீதி, மட்டக்களப்பு.



# இஸ்லாத்தில் பெண்ணியச் சிந்தனைகள்

பரீதா ஜே.ஷரீபுத்தீன்



இவ்வுலகில் தோன்றிய மாமன்னர்கள், பெரும் தலைவர்கள், சீர்திருத்தவாதிகள், அறிஞர்கள் தம் வாழ்வில் வெற்றி பெற தன் பின்னால் ஒரு பெண் எப்போதும் இருப்பாள் என்பது உலகறிந்த உண்மை. அந்த பெண் ஒரு தாயாக, மனைவியாக, சகோதரியாக அல்லது மகளாக இருக்கலாம். பிறருக்காக வாழும் சுயநலமின்மை, விட்டுக்கொடுக்கும் தன்மையும், எதையும் இன்முகத்துடனும் தாங்கும் மனநிலையும், பெண்களால் தான் வெளிப்படுத்த முடியும்.

மனித குலத்தின் சமத்துவம், சகோதரத்துவம் என்பதை இஸ்லாம் வெகுவாக வலியுறுத்துகிறது. சாதி வேற்றுமை, சமய வேற்றுமை, தொழில் வேற்றுமை, இன வேற்றுமை இவைகளை இஸ்லாம் வெகுவாக கண்டிக்கிறது. இத்தகைய உலக சகோதரத்துவத்தின் அடிப்படையில் அமைந்த மார்க்கம் பெண்களுக்கு கல்வியுரிமை, சொத்துரிமை, மண உரிமை, மணவிலக்கு உரிமை போன்ற இன்னோரன்ன உரிமைகளை திருகுர்ஆன் மூலம் பெண்களுக்கு 1429 ஆண்டுகளுக்கு முன்பே வழங்கிவிட்டது.

இஸ்லாம் இறுதி நபி மூலம் பூரணத்துவம் அடைந்த காலத்திற்கு முன் பெண் சிசுக்களை உயிருடன் புதைத்தும், பெண்களை அடிமைப்படுத்தியும் சித்திரவதை புரிந்தனர் அன்றைய அரேபியர். நபிகள் நாயகத்தின் காலத்தின் பின்னரே ஆண்களுக்கு சரிசமமாக பெண்களுக்கும் சமூகத்தில் உயர்வான அந்தஸ்து வழங்கப்பட்டது. **''பெண்கள் மனித இனத்தின் அழகிய நல்ல பகுதி''** எனக் கூறிப் பெண்ணைக் கண்ணியப்படுத்தியது இஸ்லாம். பெண்களுக்கு

இஸ்லாம் அளித்துள்ள உரிமைகளுக்குள் மிகவும் முக்கியமானது கல்வி. ஒவ்வொரு ஆணும் பெண்ணும் சரிசமமாக அறிவைப் பெற வேண்டும் என வலியுறுத்துகிறது. அதுவும் பெண் கல்வியினால் ஒரு சமூகமே மேன்மையடையும் என் ஆணித்தரமாகக் கூறுகிறது இஸ்லாம்.

பெற்றோர் விட்டுச் செல்லும் சொத்தில் பெண்களுக்கும் உரிமை உண்டு என்பதை அல்குர் ஆன் பின்வருமாறு பிரகடனப்படுத்தியது. பெற்றோரோ நெருங்கிய உறவினரோ விட்டுச் சென்ற சொத்துக்களிலிருந்து ஆண்களுக்கும் பாகமுண்டு. (அவ்வாறே) பெற்றோரோ நெருங்கிய உறவினரோ விட்டுச் சென்ற சொத்துக்களிலிருந்து பெண்களுக்குப் பாகமுண்டு. (அல்குர்ஆன் 4.7) அதுமட்டுமல்லாது, தன் சொத்துக்களுக்கு அவளே உரிமை பெற்றவளாகிறாள். அவள் தன் பெற்றோர், கண வர் அனுமதியின்றி, அதனை தானே தாராளமாக அனுபவிக்க இஸ்லாம் அனுமதிக்கின்றது. அவள் சொத்துக்களுக்கு அவளே அதிகாரியாவாள்.

மார்க்க சட்டப்படி குடும்ப வாழ்வில் ஆணின் மீதே அதிகமான பொருளாதாரச் சுமைகளை சுமத்துகிறது. பெண்ணை அதில் நின்றும் விடுவித்துள்ளது. வரலாறு புகழ்பெற்ற இறுதி ஹஜ்ஜின் போது எம் பெருமானார் நபி (ஸல்) அவர்கள் அரபாத் மைதானத்தில் நிகழ்த்திய தமது இறுதிப் பேருரையின் போது பெண்களின் உரிமை களை வழங்குமாறும், அவர்களோடும் அன்பாக நடந்துகொள்ளுமாறும் மனித சமுதாயத்திற்கு கட்டளையிட்டார்கள்.

ஒரு முஸ்லிம் பெண் தன்னில் தானே ஒளி வீசுகின்றாள். தான் மணம் செய்ய விரும்பும் கணவரைத் தேர்ந்தெடுக்க அவளுக்கு பூரண உரிமையுண்டு. மணப் பெண்ணின் சம்மதம் பெற்றே திருமணம் நடத்த வேண்டும் என இறைமறையாம் திருகுர்ஆன் இயம்புகிறது. அத்துடன் ஒரு பெண்ணைத் திருமணம் செய்வதாயின், அவ ள் ஏற்றுக்கொள்ளும் தொகை ஒன்றைக் கொடுத்தே திருமணம் நடைபெற வேண்டுமென்பது இஸ்லாமிய சட்டம். இது "மஹர்" என அழைக்கப்படுகிறது. நீங்கள் திருமணம் செய்யும் பொழுது மணமகளுக்கு அவளுடைய மஹர் பணத்தை (திருமணக் கட்டணம்) கண்ணியமான முறையில் கொடுத்துவிடுங்கள். (4.4) என திருகுர் ஆன் கட்டளையிடுகிறது. எனவே இஸ்லாத்தில் ஒரு பெண் ஒரு ஆணை மணப்பதால் தனக்குரிய தனித்தன்மையை இழந்துவிடுவதில்லை. மாறாக தனக்கிருந்த உரிமைகளுடன் பல புதிய உரிமைகளையும் பெற்றுவிடுகிறாள்.



இறைமறையாம் திருகுர்ஆன் கணவன், மனைவி பற்றி இப்படிக் கூறுகிறது. **அவர்கள் (பெண்கள்) உங்களுக்கு ஆடையாகவும் நீங்கள் (ஆண்கள்) அவர்களுக்கு ஆடையாகவும் இருக்கிறீர்கள். (திருக்குர்ஆன் 2:187)** ஒரு மனிதனுக்கு ஆடை உடலுக்கு எப்படி அழகூட்டுகிறதோ அதேபோல் இல்லற வாழ்வின் எழிலுக்கு தம்பதியினர் இருவருமே காரணமாக அமைதல் வேண்டும். குளிரையும் வெப்பத்தையும் ஆடை தடுப்பதுபோல், வரும் இன்பதுன்பங்களை தம்பதியினர் ஒருமித்துப் பகிர்ந்துகொள்ள வேண்டும். மானத்தைக் காக்க ஆடை பயன்படுவதைப் போன்று தம்பதியினரின் குறைநிறைகளை மறைப்பதற்கு இல்லறம் துணை புரிதல் வேண்டும் என ஒரு இனிய உவமையின் மூலம் திருக்குர்ஆன் நமக்கு இல்லற வாழ்வை விளக்கிக் கூறுகிறது.

குடும்பப் பொறுப்பில் தம்பதியினர் இருவருமே சம உரிமையுடையவர்கள் என்றாலும் உடல் வலிமை, உழைக்கும் திறன் போன்றவற்றால் ஆண்கள் பெண்களைவிட சிறிது மேலானவர்கள் என திருக்குர்ஆன் இயம்புகிறது. இதனால் வலியோராகிய ஆண்கள் மெல்லியர்களாகிய பெண்களை தாம் விரும்பியவாறெல்லாம் நடாத்த இஸ்லாத்தில் அனுமதியில்லை. பெண்களைக் கண்ணியமான முறையிலேயே நடாத்த வேண்டும். பெண்களைத் துன்புறுத்துவதை இஸ்லாம் வெறுக்கிறது. கண்டிக்கிறது.

ஒரு பெண் தன் மணவாழ்வில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு தீர்க்க முடியாத பிணக்குகள் ஏற்படுமாயின், அந்நரக வாழ்வை வாழமுடியாது போனால் அதிலிருந்து மணவிலக்கு (தலாக்) பெறுவதிலும் ஓர் இஸ்லாமிய பெண்ணுக்கு உரிமையுண்டு. மேலும் தன் கணவன் இறந்த பின் மறுமணம் செய்துகொள்ளவும் சொத்துரிமை கொள்ளவும் அவளுக்கு பூரண உரிமை அளிக்கப்பட்டுள்ளது. கல்வி, வீரம், ஆன்மீகம், தியாகம், தர்மசிந்தனை, நிர்வாகத் திறமை போன்ற துறைகளிலும் தங்கள் பங்கினை சரிவர நிறைவேற்றி வருவதற்கு பெண்களுக்குப் போதிய வாய்ப்புக்கள் அளிக்கப்பட்டிருக்கிறது. இவற்றுக்கெல்லாம் தாங்கள் தகுதியானவர்களே என்பதை இஸ்லாமிய பெண்கள் நிரூபித்தும் வருகின்றனர்.

இஸ்லாத்தின் மூலமாக பெருமை பெற்றது பெண்ணினம். இன்று பரவலாகப் பேசப்பட்டுவரும் பெண் ணியம் பற்றிய சிந்தனைகள் இறைமறையாம் திருகுர்ஆனில் மிகுதியாகக் காணப்படுகிறது. உலகில் ஒரு பாதியாகிய பெண்கள் மற்றொரு பாதியாக விளங்கும் ஆண்களையும் பெற்றெடுத்து வளர்க்கும் பெருமைக்கு உரியவர்கள். மாதாவின் பாதத்தடியில் மைந்தனின் சொர்க்கம் எனப் பெண்ணை கண்ணியப்படுத்தும் போது இதைவிட நமக்கு வேறு என்ன வேண்டும்? ■

# "பெண்ணிற் பெருந்தக்க யாவுள"

இ.இளங்கோவன்
செயலாளர்,
கல்வி அமைச்சு, வடமாகாணம்.

பெண்ணியச் சிந்தனைகள் கருத்துக்கள் முனைப்புப் பெற்றுள்ள இக் காலகட்டத்தில் அவை தொடர்பான வாதப்பிரதிவாதங்கள் ஒருபுறம் நிற்க, சமூகம் என்ற கட்டமைப்பில் பெண் மிக மகோன்னத மான பங்கையே வகிக்கிறாள் என்ற கருத்துக்கு மாற்றுக் கருத்து இருக்க முடியாது. பெண்ணைத் தவிர்த்து ஒரு இல்லத்தையோ, அலுவலகத்தையோ மிகச் சிறப்பாக நிறைவேற்ற முடியுமா? என்ற கேள்வியும் ஏற்றுக்கொள்ள வேண்டியதே.

சமூகத்தோடு இயைந்து வாழ்தல் என்ற பண்போடு தன் குழந்தையை வளர்த்தெடுக்க தாய் வகிக்கும் பங்குத் தந்தையைவிட மிகப் பெரியதாகும்.

நாளைய சமூகப் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு ஏற்ற வகையில், இன்றைய சிறார்களுக்கு நல்ல தலைமைத்துவப் பண்பை, ஆளுமையை, அறிவை வழங்கும் பயிற்சிக் களமாக இயங்கிவரும் கல்விக் கூடங்களில் வளவாளர்களாகச் செயற்படும் ஆசிரியர்களில் பெரும்பான்மையானோர் பெண்களே என்பதையும் நாம் மனங்கொள்ள வேண்டும்.

அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைமைத்துவத்தை அல்லது உயர் பதவியை வகித்து தனது ஆளுமையால் அதனைச் சிறப்பாக நிர்வகிக்கும் பெண்களையும் நாம் பார்க்காமல் இல்லை.

இவ்வாறு, இல்லத்தலைவி, தாய், குரு, நிர்வாகி என்றெல்லாம் சமூகத்தில் நடிபங்குகள் பல ஏற்று செயற்பட்டு வரும் இத்தகைய பெண் சமூகத்தில் ஆக்ரோஷமான பெண் அடக்குமுறை, வன்முறை காணப்படுகிறது என்ற கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது.

ஆனால் படிக்காத, கல்வி அறிவு பெறாத, பண்பாடு வளர்ச்சி பெறாத சமூகத்தில் ஆக்ரோஷமான அடக்குமுறைக்கு, வன்முறைக்கு பெண் உள்ளாகிறாள் என்பது கசப்பான நிதர்சனமாகும். இதனை மாற்ற வேண்டியது அல்லது அதனது மாற்றும் வழி பற்றிச் சிந்திக்க வேண்டியது மிக அவசியமானதாகும். கருத்தரங்குகளும், மாநாடுகளும், நூல்வெளியீடுகளும் கல்வி கற்ற சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்துவதைப் போன்று கல்வி அறிவு பெறாத அடிமட்ட சமூகத்தில் தாக்கத்தை அல்லது மாற்றத்தை ஏற்படுத்திவிடும் என நாம் எதிர்பார்க்க முடியாது.



ஆகவே, பெண்ணடிமை விலங்கை, அறுத்தெறிய கல்வி அறிவுள்ள சமூகமொன்றை கட்டியெழுப்ப முயலுதல் வேண்டும். பள்ளி செல்லாத பாலகர்களை இடைவிலகி நிற்கும் சிறார்களை பள்ளி செல்ல வைக்கவேண்டும். நாளைய சமூகம் அறிவு பெற்ற சமூகமாக மாற அதற்காக இன்று முயலவேண்டும். அப்போதுதான் பெண் தன் பிரஞ்ஞை, தான் என்ற சுயமான அனுபவம் எய்தல் பற்றி சிந்திக்கத் தலைப்படுவாள். நாம் நமது சமூகம் என்று ஆணும் சிந்திக்க தலைப்படுவான். இத்தகைய சிந்தனை விரிவு பெற்ற சமூகத்தில் பெண் அடிமைத்தனம் வெயில்பட்ட பனிபோல் விலகியோடும். சுபீட்சமான சமூகமொன்றை எம்மால் காணமுடியும். ■

நன்றி : 'சமானம்' (வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை,
இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள வெளியீடு



# "சிரி" கதை

ஒரு பெண் இன்னொரு பெண்ணிடம் சொன்னாள், "ஆசிரியரைத் திருமணம் செய்தது தப்பாகிவிட்டது. சிறிய தவறு செய்தாலும் வாங்கின் மேல் ஏறி நிற்கச் சொல்கிறார்" என.

அதற்கு மற்றப்பெண் சொன்னாள் "இது பரவாயில்லை. நான் 'பஸ் கண்டக்டரை'க் கட்டியது இதைவிடப் பிரச்சினையாகிவிட்டது. வீட்டு வாசலுக்கு வந்தால் 'படியில் நிற்காதே, உள்ளே போ' என்கிறார்".

இந்த இரு பெண்களும் கதைத்துக்கொண்டிருந்ததைக் காதுகொடுத்த இன்னொரு பெண் சொன்னாள், "நீங்கள் இருவரும் பரவாயில்லை. நான் 'கார் மெக்கானிக்'கைக் கட்டிக்கொண்டு படுகிற பாடு. எப்போதும் வீட்டில் கட்டிலுக்குக் கீழேதான் அண்ணாந்து படுத்துக் கொள்கிறார்" என்று.

அப்போது இடையில் வந்த இன்னொரு பெண் சொன்னாள், "எனக்கு உங்களைப் போல் பிரச்சினைகள் எதுவும் இல்லை. எனது புருஷன் ஒரு பொலிஸ்காரர். அவர் கோபத்தில் அடிக்கவரும் போது ஐந்தோ பத்தோ ரூபாயை நீட்டினால் வாங்கிக்கொண்டு அடிக்காமல் போய்விடுவார்" என்றாள்.

- கோபி -

# எங்களுக்கும் காலம் வரும்

செங்கதிரோன்



சீதன விளக்குச்
சுவாலையில் விழுந்து
வெந்து மடியும்
விட்டில் பூச்சிப்
பெண்கள் நாங்கள்.

இப்படி இனிமேல்
இருக்க மாட்டோம்!
என்றோ ஒருநாள்
ஒன்றாய்க் கூடுவோம்!
ஒன்றாய்க்கூடி
உயரப் பறப்போம்!
உயரப் பறந்து
விளக்கினில் வீழ்வோம்!
வீழ்ந்து விளக்குச்
சுவாலையை அணைப்போம்!

சுவாலையின்
சொந்தக்கார ஆண்களே!
நீங்களும் கவனம்!
ஏனெனில்,
நீங்களும் உடையலாம்
அந்தத் தருணம்.
அந்தக் காலமே
பெண்கள் எமக்குப்
பெருமைக்காலம்.

*நன்றி : மல்லிகை*



# மாறிவரும் இலக்கியப் போக்குகள்

அன்புமணி

## 1) செய்யுள் இலக்கியம் :

சங்க காலத்திலிருந்து இலக்கிய நடை, காலத்துக்குக்காலம் மாறிவந்திருப்பதை நாம் அவதானிக்கலாம். செய்யுள் நடை கூட சங்ககாலம், சங்கம்மருவியகாலம், சோழர் காலம், நாயக்கர் காலம், ஐரோப்பியர் காலம் முதலிய கால கட்டங்களில் மாற்றமடைந்திருக்கிறது.

மிகக் கடினமாகயிருந்த செய்யுள் நடை மகாகவி பாரதியின் காலத்தில் ஒரு திருப்பத்தைக் கண்டது. எளிய தமிழில் செய்யுள்களை எழுதும் நடைமுறை வந்தது. பாரதி காட்டிய பாதையில் மரபுக் கவிதை எழுதுவோர் பழகுதமிழில் அவற்றை எழுதினர்.

அதுகூட இன்று மாற்றம் பெற்றுவிட்டது. யாப்பு விதிகளுக்கமைந்த மரபுவழக்கு மாறி புதுக் கவிதை தோற்றம் பெற்றது. இன்று அதுவும் மாறி "ஹைக்கூ" கவிதைகள் தோற்றம் பெற்றுள்ளன. ஒரு ஒப்பீட்டு உதாரணம் :

**வெய்யோனொளி தன்மேனியின்**
**விரிசோதியில் மறைய**
**பொய்யோ எனும் இடையாளொடும்**
**இளையானொடும் போனான்**
**மையோ மரகதமோ, மழைமுகிலோ**
**மறிகடலோ**
**ஐயோ இவன் வடிவென்பது**
**அழியா அழகுடையான்**

(கம்பராமாயணப் பாடல்)

இது மரபுக் கவிதை. ஆனால் இன்றுள்ள ஒரு புதுக்கவிதையைப் பாருங்கள்.

**பசியால் அழுத மனைவியின் கண்ணீரைத் தன்**
**பொன்னாடையால் துடைத்தார் புலவர்,**
**புறப்பட்டார் அடுத்த விழாவுக்கு**

(நறுக்கு - காசி ஆனந்தன்)

## 2) புனைகதை இலக்கியம் :

வ.வே.சு.ஐயர் காலத்துச் சிறுகதைப் போக்கு புதுமைப்பித்தன் காலத்தில் ஒரு திருப்பத்தைக் கண்டது. "மணிக்கொடி" குழுவினர் தோன்றினர். "மணிக்கொடி" காலம் மலர்ந்தது. அதே காலகட்டத்தில் இலங்கையில் "மறுமலர்ச்சி" தோன்றியது. வரதர் முதலியோர் மறுமலர்ச்சிக் காலத்தை முன்னெடுத்துச் சென்றனர்.

அடுத்த கட்டத்தில் ஜனரஞ்சக எழுத்து மலர்ந்தது. கல்கி, அகிலன், நா.பார்த்தசாரதி போன்றோர் பிரபலம் பெற்றனர். அவர்களுடைய எழுத்து நீண்டகாலம் நிலைத்திருந்தது. பின்னர் அதனிலும் ஒரு மாற்றம் ஏற்பட்டது. தமிழகத்தில் "ஜெயகாந்தன்" இலக்கியப் போக்கில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தினார். அவருடைய கதைகள் "ஆனந்த விகடன்" சஞ்சிகையில் முத்திரைக் கதைகளாக வெளிவந்தன. இந்த வரிசையில் அவர் எழுதிய "அக்கினிப் பிரவேசம்" என்ற சிறுகதை மரபுவாதிகளிடையே முகச்சுளிப்பை ஏற்படுத்தியது. கெட்டுப்போன பெண்ணை சமூகம் நிராகரிக்கக்கூடாது என்ற அவரது சிந்தனை சலசலப்பை ஏற்படுத்தியது. அவர் ஏற்படுத்திய இத்திருப்பம் தமிழ் இலக்கியத்தில் நிரந்தர இடம் பெற்றது.

பின்னால் அவருக்கு ஞான பீட இலக்கியப் பரிசு (ஒரு லட்சம் ரூபா) கிடைத்தது. தற்போது அவர் எழுதாவிட்டாலும் அவர் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியர் என்பதை மறுக்க முடியாது.

### 3) முற்போக்கு இலக்கியம் :

இதனிடையில் கம்யூனிசவாதிகள் இலக்கியத்தில் கம்யூனிசக் கோட்பாடுகளைப் புகுத்தி பாட்டாளிகள் எழுச்சி, தொழிலாளர் மேன்மை, மேல்நாட்டு வர்க்கத்தினரின் கொடுமை முதலியவற்றைக் கருப் பொருளாகக் கொண்டு இலக்கியம் படைக்க ஆரம்பித்தனர். இவர்களுடைய படைப்புக்கள், கலைத்தன்மை குறைந்து பிரச்சார மணம் நிறைந்துள்ளது என்பது ஒரு பொதுவான கருத்து. இதை மறுப்பதற்கில்லை. அவ்வாறே கம்யூனிஸ்ட் அல்லாதோர் எழுதும் கதைகளை இவர்கள் குறைவாக மதிப்பிட்டனர். இது அவர்களது விமர்சனங்களில் பிரதிபலித்தது. இவ்வாறு "முற்போக்கு" இலக்கியம் முகிழ்த்தது இலக்கியத்தில் "முற்போக்கு", "பிற்போக்கு" என்ற வாதப்பிரதிவாதம் எழுந்தது.

இலக்கையில் இந்தப் பிரிவினை வாதம் மிகவும் தீவிரம் அடைந்தது. 1960களில், இலக்கிய மாநாடுகளில் கூழ்முட்டை வீசும் கலாசாரம் தோன்றியதையும் யாரும் மறக்க முடியாது. இது ஒரு ஆரோக்கியம் அற்ற நிலை என்பதை இப்போது யாவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இந்த முற்போக்குவாதத்தை தனி ஆளாக நின்று எதிர்த்தவர் எஸ்.பொ. தமிழகத்தில் ஜெயகாந்தன் போல ஈழத்தில் எஸ்.பொ.வும் ஒரு தீவிரவாதியாக விளங்கினார். இவரும் புனைகதை இலக்கியத்தில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியவரென்பது மனங்கொள்ளத்தக்கது.



### 4) தலித் இலக்கியம் :

இதற்கிடையில் தமிழகத்தில் புனைகதை இலக்கியத்தில் ஒரு புதிய திருப்புமுனை ஏற்பட்டது. அதாவது தாழ்த்தப்பட்டோர் எழுதும் இலக்கியங்களையும் தாழ்த்தப்பட்டோர் பற்றிய இலக்கியங்களையும் "தலித்" இலக்கியம் எனக் குறிப்பிட்டனர். இது ஒரு அவசியமற்ற பிரிவு அல்லது பிளவு அல்லது பிறழ்வு எனலாம்.

நந்தனார் கதைக் காலத்தில் இருந்து தாழ்த்தப்பட்டோர் பற்றிய இலக்கியம் தாராளமாக இடம்பெற்றுள்ளது. பாரதி பாடல்களில், தீண்டாமைக்கு எதிரான கவிதைகள் நிறைய இடம் பெற்றுள்ளன. சாதி வேற்றுமையை நிராகரிக்கும் கதைகள், நாவல்கள் ஏராளமாக வெளிவந்துள்ளன. இன்றும் வந்துகொண்டிருக்கின்றன.

செங்கை ஆழியானின் "காட்டாறு" முதலிய இலக்கியங்கள் நிறைய உள்ளன. தமிழகத்தில் தி.மு.க.வினர் படைத்த அத்தனை இலக்கியங்களும் இவ்வாறானதே. அதனால் இவை கலைத்தன்மை குறைந்து, பிரச்சார வாடை நிறைந்து முற்போக்கு இலக்கியம் போல ஒரு வாய்ப்பாடு Formula இலக்கியமாக அமைந்தது. அதன் காரணமாக அவை நிலைத்து நிற்காமல் மறைந்து போனதையும் வரலாறு நிரூபித்துள்ளது.

எவ்வாறாயினும், முற்போக்கு இலக்கியம் போல தி.மு.க. இலக்கியம், தலித் இலக்கியம் என்பன சில வித்தியாசமான இலக்கியப் போக்குகளை முன்வைத்தன எனலாம்

### 5) நவீனத்துவ மரபின் நவீனத்துவம் :

தற்காலத்தில் நவீனத்துவம் (Modernism) பின் நவீனத்துவம் (Post Modernism) முதலிய இலக்கியப் போக்குகள் முகம் காட்டுகின்றன. இவ்வகை இலக்கியங்களில் பல ஜாம்பவான்கள் இருக்கின்றனர்.

இருந்தாலும் இவ்வகை இலக்கியத்தைப் பற்றி விளங்கிக் கொள்வதற்கு அண்மையில் தமலர்ச்செல்வன் வெளியிட்ட "பெரிய எழுத்து" நூலிலுள்ள சிறுகதைகளைக் குறிப்பிடலாம். இலக்கியப் போக்குகளில் பரிசோதனை செய்பவர்கள் இவ்வாறான இலக்கியங்களைப் படைக்கின்றனர். அதுவும் இவர்களுடைய சொந்தச் சரக்கல்ல என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

மேல்நாட்டு எழுத்தாளர்கள் சிலர் இவ்வாறு பரீட்சார்த்தமாக எழுதியவுடன், அதைப் பின்பற்றி நம்மவர்கள் எழுத ஆரம்பிப்பார்கள்.

புதுக்கவிதையும், 'ஹைக்கூ' (ஜப்பான்) கவிதையும் எவ்வாறு தமிழில் புகுந்து, குட்டை குழப்பி யதோ அவ்வாறே இந்த நவீனத் துவம், பின் நவீனத்துவம் புனை கதையில் புகுந்து குட்டை குழப்பு கின்றன. அவற்றைப் பின்பற்றுவது ஏதோ "ஹைகிளாஸ்" என நம்ம வர்கள் நினைப்பதால் தெளிந்த நீரோடை போல் சென்று கொண்டி ருந்த நமது புனைகதை இலக்கி யமும் கலங்கிச் சேறாகின்றது. இது "மொடேர்ன் ஆர்ட்" போன்ற ஒரு வகை வக்கிரப்போக்கு எனலாம். 'மொடேர்ன் ஆர்ட்' மரபுவழி ஓவி யங்களைச் சிதைத்தது. புதுக் கவிதை மரபுக்கவிதையைச் சிதைத்தது. நவீனத்துவம், மரபு வழிப் புனைகதையைச் சிதைத்தது.

### 6) இலக்கியத்தின் அடிப்படை நோக்கம் :

எத்தனை மாற்றங்கள் வந்தா லும், எத்தனை நவீனத்துவம் வந் தாலும், இலக்கியத்தின் அடிப்ப டைத் தத்துவம் மாறக் கூடாது அல்லவா?

இலக்கியம் என்பது என்ன?

**இலக்கியம் என்பது வாழ்வைப் பிரதிபலிப்பது; வாழ்க்கையை விமர்சிப்பது; வாழ்க்கையை நெறிப்படுத்துவது.**

எனவே இந்த அடிப்படை நோக்கம் நிறைவேறு வதற்கு இந்த இலக்கியம் மக்களைச் சென்ற டைய வேண்டும். மக்களுக்குப் புரிய வேண்டும். ஆக்கங்களின் செய்தி எவ்வித தளம்பமும் இல்லாமல் மக்கள் மனதில் ஆழப் பதிய வேண்டும்.

**இலக்கியத்தின் போக்கு மாற லாம். ஆனால் அதன் நோக்கு (இலக்கு) மாறக்கூடாது - மாற முடியாது.**

இன்றைய நுனிப்புல் மேயும் விமர்சகர்கள், எழுத்தாளர்களை ஜனரஞ்சக எழுத்தாளர், கனதி எழுத்தாளர் என முத்திரை குத்தி விடுகின்றனர். ஆனால் அவர்களின் ஆக்கங்களைத் தனியாகப் பார்ப்ப தில்லை.

உதாரணமாக யாழ்ப்பாணத்து நூலகம் எரிக்கப்பட்ட போது, 'சுஜாதா' என்ற ஜனரஞ்சக எழுத் தாளர் "ஒரு லட்சம் புத்தகங்கள்" என்ற அருமையான சிறுகதையை எழுதினார். அவ்வாறே "பெண் யந்திரம்", "கனவுத் தொழிற்சாலை" (நாவல்கள்), "ஊஞ்சல்" நாடகம் முதலியவற்றை எழுதினார். எழுதி யவர் ஜனரஞ்சக எழுத்தாளர் என்ப தால் விமர்சகர்கள் இவற்றைப் பற்றி அலட்டிக்கொள்ளவே இல்லை.



# விடை காணப்படாத வினாக்கள்

என்.ஸ்ரீதேவி
(உதவிப் பணிப்பாளர், பண்பாட்டு அலுவல்கள்
வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சு)

விற்றதார்? கலைபாதியோடு வனத்திலே அழவிட்டதார்? துகிலுரிய விட்டு விளித்ததார்?

இந்த வினாக்களுக்கெல்லாம் ஆண்களே பதிலுரைக்க! கற்புக்கரசியர் என்றவுடன் கண்ணகி, சாவித்திரி, சீதை என்று காவிய நாயகிகள் பெயர் சொல்லும் ஆண்கள் தமது தாய், மனைவி, சகோதரியின் பெயரைக் சொல்லத் தயங்குவதேன்?

காவிய நாயகன் இராமன் தன் மனைவி சீதையின் கற்பை சந்தேகித்து உலகை நம்பவைக்க என்று பொய்யுரைத்து தீக்குளிக்க வைத்த கதை பொய் என்பதா?

வள்ளுவனுக்குப் பரிந்து பேசும் சான்றோரே இதற்கென்ன பதில்?

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள..." என்று கூறி அமைதி காணாது

"கற்பெனும் திண்மை உண்டாகப் பெறின்
என்று அடுத்து பெண்ணை சாடியதேன்"

பெண் தனி கற்புநெறியை மனத்தால் காக்கும் இயல்பு கொண்டவள் என்பதை ஏற்க மறுத்தா?

இல்லை பெண் என்பவள் மென்மையானவள் இலகுவாக ஆணுக்கு இணங்கிவிடுவாள் என்ற எண்ணம் கொண்டா?

தமது குடியின் பெருமையை உயர்த்துவது இல்லத் தலைவனும் தலைவியும் என்றிருக்க வள்ளுவன் அது விடயத்தில் பக்கச்சார்பு பேசியதேன்?

"நல்லாண்மை என்பது ஒருவற்குத்தான் பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல்"

"குடியின் பெருமையை உயர்த்துபவன் நல்ல ஆண்மை உடையவன்" என்று கூறி ஆண்மை என்னும் அடிக்கு அழுத்தம் கொடுத்ததேன்? ஆளுமை என்றுரைப்பின் அது இருசாரார்க்கும் பொதுவாகிவிடும் என்பதாலா?

பெண் தனக்குரிய உரிமையைக் கேட்கும் போது அவள் ஆணாக மாற நினைக்கிறாள் என்று ஆண்கள் பேசுவதேன்?


கால் வலிக்கக் காததூரம் பஸ்ஸிலே பயணம் செய்தபோதும் அவளின் உடலின் மென்மையை உணராது தனது இருக்கையில் சற்று இடம்கொடுக்காது "ஆணுக்கு நிகர் என்று பேசும்" பெண்களுக்கு இது வேண்டும் என்றுரைப்பது அவர்களின் கல்நெஞ்சத்தனம் என்பதா? இல்லை அறியாமை என்பதா?

பெண்கள் பேசின் நாவடக்கம் இல்லை என்பர். இல்லத்திற்கு வேண்டாம் என்பர். அவளே திருமணமானவள் என்றால் கணவன் சரியில்லை என்பர். இவ்வாறு பேசியே பெண்ணை அடக்கி ஆணின் பேச்சுக்குத் தலையசைத்தால் போதும் என்றிருப்பது நியாயந்தானா?

இப்படி எத்தனையோ வினாக்களுக்கு அன்று தொடக்கம் இன்றுவரை விடைகாணப்படாதே உள்ளது.

நன்றி : 'சமானம்' (வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள வெளியீடு

## உறுத்தல்



இரவெல்லாம்
விழித்திருந்து
எங்களூர் ஆச்சி
இழைத்த
பனைப்பாய்....
வாங்கினேன்.

உறங்குவது
எப்படி
இவள்
பாயில்?

நன்றி : 'காசி ஆனந்தன் நறுக்குகள்'



மாணிக்கம், இதென்னடாப்பா ஊரூரா எல்லாப் பொண்டுகளும் தீத்தக் கரைக்குப் போற மாதிரி வெளிக்கிட்டுக் கொண்டு போகுதுகள்? என்ன புதினமாம்?

அடடே இண்டைக்குப் பொண்டுகள் தினம் கொண்டாடுறாங்களாமா? அதுதானே பாத்தனான். புளியந்தீவுப் பாலத்துக்கு மேலால உம்பாரமாக் கொடியெல்லாம் பறக்குது.

# விளாசல் வீரக்குட்டி



தேவையான விசயம்தான். அதுகளுக்கும் நம்மளப்போல எல்லா உரிமையும் இருக்கத்தானே வேணும். என்னதானெண்டாலும் தாய்க்குலமெலுவா. ஆனா ஒண்டு, நமக்குத்தான் ஆம்பிளதின மெண்ட ஒரு மண்ணாங்கட் டியும் இல்ல.

ஆம்பிளைகளெல்லாம் பொம்புளயள அடிக்கிறதும், உதைக்கிறதும், அடிமைகளைப் போல நடத்துறதும் எந்தநாளும் சரிப் பட்டுவருமாபின்ன? அந்த நாளையில ஊட்டுக்கு ஊடு வாசலுக்கு முன்னால தட்டுவேலி மறைப்பும், கத்திவர வேலியும் கழலவர முள் அரணும் போட்டு பொண்டுகளையெல்லாம் மறியலுக்குள்ளபோட்டு அடச்ச மாதிரி எண்டப்போய் என்ன பாட்டத் தான் படுத்தினாங்க. இண்டைக்கு அப்பிடியா? றோட்டு றோட்டா புத்தில இருந்து ஈசல்கிள புறப்பட்ட மாதிரி எல்லாப் பொண்டுகளும் மோட்டச்சைக்கிள்ள ஓடித் திரிபிதுகள். இனி அதுகள ஒருத்தனும் நொட்டையுமேலா! புடுங்கயும் ஏலா!

நம்மட சோட்டைக்கு மட்டும் ஊட்டுக்குள்ள வச்சிருக்கிதுக்குமட்டும்தானா பொண்டுகள் தேவ? அதுகளும் நம்மளப்போல ஒரு சீவன்தானே!

நீயும் கனகாலமாப் பொண்டாட்டியப் பிரிஞ்சு வாழுறதாக் கேள்விப்பட்டன். சேச்சே அதெல்லாம் சரிப்பட்டு வராடா மாணிக்கம். பொம்புள இல்லாம ஆம்புள வாழவே ஏலாது.

இதெல்லாத்தையும் நேரத்தோட தெரிஞ்சிதானே நம்மட சிவபெருமான் உமாதேவியத் தன்ர உடம்போட சேத்துவச்சிருக்கார்.

பொம்புளயள அடக்கி ஒடுக்கின காலம் எண்டைக்கோ மலையேறிப் பொயித்து. இப்ப அதுகள்ர காலம்தான்.

நீ இண்டைக்கே ஊட்டபோய், உன்ட பொஞ்சாதியோட உறவாகித்து இந்த உலகமெல்லாம் கொண்டாடுற பொம்புளயள் தினத்தில நல்ல வடிவா ஆக்கிக்காச்சித் திண்டுத்துச் சந்தோசமாக்கிட. நான் ஒருக்காப் புளியந்தீவுப் பக்கம் போய், ஒரு றவுண்டடிச்சித்து வாறன்!

- மிதுனன் -



# துணி

துணி இல்லாத
நடிகை

விளம்பர
ஓவியம்

அகலத் துணியில்.

நன்றி : 'காசி ஆனந்தன் நறுக்குகள்'



# குறுக்கெழுத்துப் போட்டி - 03

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர்,
'செங்கதிர்',
குறுக்கெழுத்துப் போட்டி-03
19, மேல்மாடி வீதி,
மட்டக்களப்பு.

1வது பரிசு ரூ 500/=
2வது பரிசு ரூ 300/=
3வது பரிசு ரூ 200/=

விடை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி

30.04.2008

## குறுக்கெழுத்துப் போட்டி - 03

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

பெயர் :..........................................

முகவரி :..........................................

..........................................

கையொப்பம்:..............................திகதி :..............

இந்தப் படிவத்தில் மட்டுமே விடைகள் அனுப்பப்பட வேண்டும்.

### இடமிருந்து வலம்

01) காரைக்காலம்மையாரின் இயற்பெயர்.
06) எம். எஸ். சுப்புலட்சுமி நடித்த தமிழ் திரைப்படங்களில் ஒன்று.
11) பெண்ணின் பருவங்களில் ஒரு கட்டம்.
15) மங்கைக்கு மறுபெயர்.
19) நெருப்பில்லாமல் இது வராது.
20) சிறையில் வாடுபவன்.
22) பதுங்குகுழி ஒழுங்காக இல்லை.
29) பறவை.
36) முனிவர்.
39) கிழிசல் துணி.
45) நோ.
47) பண்டைக் காலத்தில் இதிலும் பயணித்தனர்.

### மேலிருந்து கீழ்

01) மகிழ்ச்சி.
03) இளையவள்.
05) எழுத்தாளர் லக்ஷ்மியின் இயற்பெயரின் கடைசி எழுத்து இல்லை.
07) பகலை அடுத்து வருவது.
11) காதல் காவியமொன்றின் கதாநாயகி.
13) இந்தியாவின் நதி.
20) அறுசுவையொன்றின் பேச்சு மொழி.
21) விளக்கெரிக்கப் பயன்படுவது.
24) ஊரின் பெயர்.
34) புத்திரிக்கு ஒரு எழுத்துக் குறைகிறது.
39) ஆசை.

**குறுக்கெழுத்துப்போட்டி – 01, பரிசு பெற்றோர் விபரம்**

1ம் பரிசு - **J.சில்வின்**
பெத்தனி, கிரான்.

2வது பரிசு - **வ.நிரோஷன்**
இல.63/10,
புகையிரத நிலைய வீதி,
மட்டக்களப்பு.

3வது பரிசு - **தரண்யா யோகநாதன்**
இல.611, பார் வீதி,
மட்டக்களப்பு.

காசோலைகள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

**குறுக்கெழுத்துப்போட்டி – 01, சரியான விடை**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 ம | 2 ல | 3 ர் | 4 க | 5 ங் | 6 தி | 7 செ |
| 8 ன் | | 10 அ | 11 ள | 12 வு | 13 ப | 14 வி |
| 15 ம | 16 தி | 17 பா | 18 ப் | 19 பா | 20 யா | 21 லி |
| 22 த | 23 மி | 24 ழ் | 25 பி | 26 ன் | 27 னை | 28 ல் |
| 29 ன் | 30 | 31 அ | 32 ர | 33 ம் | 34 வ | 35 லி |
| 36 லை | 37 ல் | 38 மு | 39 ர் | 40 வா | 41 ன் | 42 கை |
| 43 அ | 44 வ | 45 ன் | 46 சை | 47 கை | 48 ளி | 49 ம |

# பெண்



**ஏடுகளில்**
**முன் பக்கத்தில்**
**அட்டையில்.**

**வீடுகளில்**
**பின்பக்கத்தில்**
**அடுப்பங்கரையில்.**

நன்றி : 'காசி ஆனந்தன் நறுக்குகள்'

# தமிழறிவோம்

நாள்களுக்கும் நாட்களுக்கும் பொருள் வேறுபாடு உண்டு. 'நாள்' ஒருமை; 'நாள்கள்' பன்மை. நாள் என்னும் ஒருமைச் சொல்லுடன் 'கள்' விகுதி சேரும் போது நாள்கள் என்று எழுதுவதே இலக்கணப்படி சரியானது.

நாட்கள் என்றால் காலையில் இறக்கிய கள்ளைக் குறிக்கும். நாட்பட்டகள் என்றும், அதாவது பழையகள் என்றும் பொருள்படும். பழந்தமிழ் இலக்கியங்களிலெல்லாம் 'நாள்' என்ற ஒருமைச் சொல்லின் பன்மையைக் குறிக்க 'நாள்கள்' என்றே சொல்லே எடுத்தாளப்பட்டுள்ளது.

**- திருவோணன் -**



# அறிவித்தல்

## ஈழத்துப் படைப்பாளிக்கும் வெளியீட்டாளர்களுக்கும்

ஈழத்து தமிழ் நூல்களின் இருப்பினைப் பதிவுசெய்து வைக்கும் பாரிய பணியினை மேற்கொள்ளும் நோக்குடன் நூல் தேட்டம் தொடங்கப்பட்டது. லண்டனில் தற்போது புலம் பெயர்ந்து வாழும் நூலகவியலாளர் என்.செல்வராஜாவினால் 2000 ஆம் ஆண்டில் இத்தொகுப்பு முயற்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது. இன்று ஈழத்துத் தமிழ் நூல்களின் இருப்பினை ஆவணப்படுத்தி வைக்கும் ஒரேயொரு பதிவேடாக நூல் தேட்டம் விளங்குவதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். நூல் தேட்டம் தொகுப்பின் பிரதிகள் பிரித்தானிய நூலகம் உள்ளிட்ட உலக நாடுகளின் தமிழியல் துறைச் சேகரிப்புக்களும் ஆய்வுத் துறைகளும் உள்ள பல்வேறு நூலகங்களில் உசாத்துணை ஆவணமாகவும் பேணப்படுகின்றன.

இதுவரை நான்கு தொகுதிகள் முறையே 2000, 2004, 2005, 2006 ஆகிய ஆண்டுகளில் ஒவ்வொரு தொகுதியிலும் 1000 நூல்கள் என்ற அடிப்படையில் 4000 நூல்களை குறிப்புரையுடன் கூடியதாக நூல் தேட்டம் பதிவு செய்துள்ளது. ஐந்தாவது தொகுதி 2008 ஏப்ரல் மாதத்தில் மேலும் 1000 நூல்களின் பதிவுகளுடன் வெளிவரவுள்ளது.

ஈழத்துப் படைப்பாளிகளின் படைப்புக்களை நூல் தேட்டத்தின் வாயிலாகப் பதிவுசெய்து உலகளாவிய ரீதியில் ஈழத்தவரின் நூல் வளாகத்தின் தேட்டத்தை வெளிப்படுத்த இதனால் முடிந்துள்ளது. இது எவ்வித வர்த்தக நோக்கமுமற்ற தனிமனித முயற்சியாகும். இத் தொகுப்பினைத் தடையின்றித் தொடர்வதற்குப் படைப்பாளிகளினதும் வெளியீட்டாளர்களினதும் பதிப்பகங்களினதும் உதவி வேண்டப்பட்டுள்ளது.

நீங்கள் செய்ய வேண்டியது யாதெனில், உங்கள் வெளியீடுகளில் ஒவ்வொரு பிரதியைத் தொகுப்பாசிரியரின் கொழும்பு முகவரிக்கு தபாலிலோ, நேரிலோ சேர்ப்பித்து வைக்க வேண்டியதே. (N.Selvarajah,

C/1/6, Veluvanarama Flats, Hampden Lane, Wellwatte, Colombo - 06) இவ்வாறு அனுப்பி வைக்கப்படும் நூல்கள் மாதாந்த அடிப் படையில் லண்டனுக்குப் பதிவிற்காக அனுப்பி வைக்கப்படும். இந்நூல்கள் அனைத்தும் பதி வாக்கப்பட்ட பின்னர் லண்டனில் உள்ள எமது ஈழத்துத் தமிழ் நூல் காப்பகத்தில் ஆய்வுத் தேவைகளுக்காகப் பேணிப் பாதுகாக்கப்படும். ஒரு படைப்பாளி நேரடியாக அனுப்பி வைக்கும் நூல் ஒருவருட காலத்துக்குள் பிரசுரமானதொன் றாக இருந்தால், அந்நூல் பற்றிய அறிமுகத்தி னையும் ஐரோப்பிய ஊடகங்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கான வேண்டு கோளை படைப்பாளிகள் கடித மூலம் நேரடியாக விடுப்பது விரும்பத்தக்கது. (நேரடித் தொடர்பு முகவரி : N.Selvarajah, 48, Hallwicks Road, Luton LU2 9BH, United Kingdom)

நீங்கள் வெளியிட்ட நூல்களின் பிரதிகள் தற்போது கைவசம் இல்லாது போனால், அல்லது ஓரிரு பிரதிகளே கையிருப்பில் இருந்து தொகுப் பாசிரியருக்கு அவற்றை அனுப்பி வைக்க நீங்கள் தயங்கினால் தயவுசெய்து அதற்கென உள்ள படிவத்தைப் பிரதியெடுத்து அதனை முழுமையாக நிரப்பி நூலின் தலைப்புப்பக்கம், நூலியல் விபரம் கொண்ட 2 ஆம் பக்கம், பொருளடக் கம், முன்னுரிமை வெளியீட் டுரை நூலாசிரியரைப் பற்றிய குறிப்பு ஆகியவற்றின் புகைப்படப் பிரதியையும் ஒவ்வொரு படிவத்துடனும் இணைத்து நேரடியாக லண்டனுக்கு அனுப்பி வைக்கலாம். நூல் தேட்டம் தொகுதியொன்றின் இறுதிப் பக்கத்தில் தொடர்பு கொண் டும் இப்படிவத்தைப் பெற் றுக் கொள்ளலாம்.

ஒரு நூலின் வெளி யீட்டை வரலாற்றுப் பதிவாக் குவதில் ஈழத்துப் படைப்பா ளிகளுக்கிடையே எவ்வித கருத்து வேறுபாடும் இருக் காது என்று திடமாக நம்பு கின்றேன். உங்கள் ஆதர வை வழங்கி நூல் தேட்டம் தொடர்ந்தும் துரிதமாகத் தன் ஆவணப் பதிவினை மேற்கொள்ள உதவுங்கள். ■


**தகவல் :**
**என் செல்வராஜா**
நூலகவியலாளர், லண்டன்.




எங்கு எதிர்கண்டாலும் இங்கிதமாய் உரையாடும்
செங்கதிரோன் தேன் கவிஞன் தீங்குரலாம் - பொங்குதமிழ்
ஏடாய் மலரும் செங்கதிரின் இலட்சியத்தை
நாடே அறியும் ஓர் நாள்.

அக்கரைச்சக்தி (சா.சக்திதாசன்)
B/3/16, வேலுவனராம தொடர்மாடி,
வெள்ளவத்தை, கொழும்பு - 06.





"AKARAM"



- Books
- Stationers





"Aharam"
82, Bar Road,
Batticaloa.
Tel : 060-2643986



ஈழத்து எழுத்தாளர்களது
நூல்கள் யாவும்
ஒரே இடத்தில் கிடைக்கப்பெற

அகரம்


Sun Printers - 05, Iruthayapuram West, Batticaloa. 065-2222597